வானவில்

VAANAVIL

இதழ் 153 புரட்டாதி 2023

ISSUE 153 SEPTEMBER 2023

# ரணில் நாட்டை பின்னோக்கி இழுக்க முயற்சிக்கிறாரா?

அண்மையில் கொழும்பில் பொருளியல் நிபுணர்களின் மாநாடு ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனியார் துறையினரின் முயற்சிகளின் மூலமே நாட்டை முன்னேற்ற முடியும் என்ற சாரப்படப் பேசியிருக்கிறார்.

இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஏனெனில் அவரது ஐக்கிய தேசியக் கட்சியும் (ஐ.தே.க), அவரும் அந்தச் சிந்தனை வழிமுறையிலேயே வளர்ந்தவர்கள். எதிர்பாராமல் தற்செயலாகக் கிடைத்த ஜனாதிபதி பதவி காரணமாக அவர் தனது நீண்டகாலக் கொள்கைகளிலிருந்து மாறி விடுவார் என எதிர்பார்க்க முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரை 1948 இல் சுதந்திரமடைந்த நாள் முதல் 1956 வரை பிரித்தானிய காலனித்துவவாதிகள் வகுத்துக் கொடுத்த பாதையிலேயே நடைபோட்டு வந்த ஒரு நாடு. அதற்குக் காரணம், சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கமாக ரணில் இன்று தலைமை தாங்கும் ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க. தான் ஆட்சியில் அமர்ந்தது.

அன்று இலங்கையின் பொருளாதாரத்துறை முற்றுமுழுதாக பிரித்தானியர் கைகளிலேயே இருந்தது. வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம், துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து, பஸ் – ரயில் சேவைகள், பாடசாலைகள், பெருந்தோட்டங்கள், பத்திரிகை நிறுவனங்கள், பெரும் வர்த்தக நிறுவனங்கள் என அனைத்துத் துறைகளும் பிரித்தானியர் வசமே

2024 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் பல ஆச்சரியங்களை காண்பீர்கள் - ரணில்




இருந்தது. அது மட்டுமின்றி, இலங்கையின் பாதுகாப்புத் துறை, வெளிநாட்டு விவகாரங்கள் எல்லாமே பிரித்தானியரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

இந்தக் காலகட்டத்திலேதான், இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர் தலைமையிலான பாசிச அணி சோவியத் யூனியன் தலைமையிலான பாசிச எதிர்ப்பு அணிகளால் தோற்கடிக்கப்பட்டு, பல ஆசிய – ஆபிரிக்க – இலத்தீன் அமெரிக்க நாடுகளில் தேசிய சுதந்திரப் போராட்டங்கள் வீறு கொண்டெழுந்து ஒன்றன் பின் ஒன்றாக வெற்றியீட்டத் தொடங்கின. குறிப்பாக உலகின் சனத்தொகை கூடிய நாடுகளில் ஒன்றான இந்தியாவில் 1947 இல் சுதந்திரப் போராட்ட வெற்றியும், சீனாவில் 1949 இல் கம்யூனிஸ்ட்டுகள் தலைமையிலான விடுதலையும், பல்வேறு நாடுகளின் மக்களை விழிப்படையச் செய்தது.

அதன் தாக்கம் இலங்கை மக்கள் மத்தியிலும் – குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் – தேசிய உணர்வெழுச்சியை ஏற்படுத்தியது. அந்த எழுச்சிக்கு எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க தொடங்கிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி வடிவம் கொடுத்ததால், 1956 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பண்டாரநாயக்கவின் கட்சி அதுவரை ஆட்சியிலிருந்த ஏகாதிபத்திய சார்பு,

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

நூறு சிந்தனை மலரட்டும்

# புனைவுகளை அரசியலாக்கும் பிரித்தானியா ஊடகம்

ஈஸ்டர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பில் பிரித்தானியா தனியார் தொலைக்காட்சி நிறுவனம் சனல் 4, செப்டம்பர் மாதம் 6ம் திகதி 47 நிமிட நீள வீடியோ ஒன்றினை வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, இலங்கையிலும் சர்வதேச ரீதியாவும் ஈஸ்டர் தாக்குதல் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. பரபரப்பு ஒளிபரப்புகளுக்கு பெயர்போன இந்த சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம், 2009 இல் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட யுத்தக் காட்சிகளையும் 2011, 2012 ஆம் ஆண்டுகளில், ஒளிபரப்பியது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி, முக்கிய மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மூன்று நட்சத்திர ஹோட்டல்கள் மீது தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதலில் 8 இஸ்லாமிய தற்கொலைக் குண்டுதாரிகள் அடங்கலாக, 40 வெளிநாட்டு பிரஜைகள் மற்றும் 45 குழந்தைகள் உட்பட 277 பேர் உயிரிழந்திருந்தனர். அத்துடன், இந்த தாக்குதலில் சுமார் 400 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

இத்தாக்குதலுக்கு ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் உடனடியாகவே உரிமை கோரினார்கள். ஐ.எஸ் உடன் தொடர்புடைய இலங்கையைச் சேர்ந்த தேசிய தவ்ஹீத் ஜமாத் (National Thowheeth Jama'ath - NTJ)) என்ற அமைப்பே தாக்குதலை நடத்தினார்கள் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டது. அந்த அமைப்பின் தலைவராக செயற்பட்ட சஹ்ரான் ஹாசிம் இந்தத் தாக்குதலுக்கு தலைமை தாங்கியிருந்ததுடன், அவரும் இந்த தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்திருந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து, இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வன்முறைகள் இடம்பெற்றன. முஸ்லிம்களை இலக்காக கொண்டு, பல்வேறு பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதுடன், பல கோடி ரூபா சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

ஈஸ்டர் தாக்குதல் நடந்த அன்றிலிருந்து, கடந்த நான்கு ஆண்டுகளில் அரசாங்கம் பல்வேறு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. குண்டுவெடிப்பிற்குப் பின்னர், மே 22 2019 அன்று, சபாநாயகர் பாராளுமன்றத் தேர்வுக் குழுவொன்றினை நியமித்தார், அக்குழு 23 ஒக்ரோபர் 2019 அன்று தனது அறிக்கையை சமர்ப்பித்தது. ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பலதரப்பட்ட அரசியல் கட்சிகள் அங்கம் வகித்ததால், இணக்கப்பாடொன்றுக்கு வருவதில் பல சிரமங்கள் இருந்ததாகத் தெரிகின்றது.

அதனைத் தொடர்ந்து 2019 செப்டெம்பர் 22ம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றினை நியமித்தார். அக்குழு பலரை விசாரணைக்கு அழைத்து பல முக்கிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு, அதன் அறிக்கையை 2021 பெப்ரவரி 1 ஆம் திகதி சமர்ப்பித்தது. அதனை பகிரங்கமாக அரசாங்கம் இன்னமும் வெளியிடவில்லை. ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அதைத் தடுப்பதற்கு முன்நடவடிக்கை எடுக்காதது குற்றமென, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு 100 மில்லியன் ரூபா செலுத்துமாறு கடந்த ஜனவரியில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் ஊடகப்பேச்சாளரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானின் செயலாளராருமான அசாத் மௌலானா என்பவரே, சனல் 4 தயாரித்தளித்த இந்த ஆவணப்படத்திற்கான முழுத்தகவல்களையும் வழங்கியுள்ளார், இவர் சுவிற்சிலாந்தில் அரசியல் தஞ்சம் கோரி, அகதி அந்தஸ்து கிடைக்கப்பெற்று 2022 ஆண்டிலிருந்து அங்கு வாழ்ந்து வருவதாகத் தெரிகின்றது.

கோட்டாபய ராஜபக்ச 2019 ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக புலனாய்வு அமைப்புகளுடன் இணைந்து இதற்கான சதித் திட்டம் தீட்டப்பட்டதாகவே சனல் 4 ஆவணப்படத்தின் பிரதானகளம் நகர்த்தப்பட்டுள்ளது. இது நம்பத்தகுந்த கதையல்ல. ஏனெனில் இத்தாக்குதல் நடைபெறுவதற்கு ஓராண்டிற்கு முன்னபாகவே நடைபெற்ற உள்ளூராட்சி சபைத்தேர்தலில், கோட்டாபய சார்ந்த கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றியீட்டிருந்தது. மேலும் கோட்டாபய உட்பட ராஜபக்ச குடும்பம் இஸ்லாமியர்ளுக்கு விரோதமானவரகள் என்ற கருத்து இலங்கை முஸ்லீம்களிடையே பரவலாக உள்ளது. எனவே அப்படிப்பட்ட ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்காக, 8 இஸ்லாமியர்கள் தற்கொலைத் தியாகிகளாக மாறியிருக்க வாய்ப்பில்லை.

இந்த வீடியோ இப்போது வெளியிடப்பட்டிருப்பதன் பிரதான நோக்கம், ஈஸ்டர் தாக்குதலுடன் ராஜபக்ச குடும்பம் உள்ளிட்ட சிலருக்கு தொடர்பு இருக்கின்றது என்பதை தெரிவிப்பதுடன், ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த எவராவது இனிவருங்காலங்களில் ஆட்சியதிகாரங்களில் அமர்வதை தடுத்து நிறுத்துவதுமேயாகும் என்பது தெளிவானது.

ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பமாகும் வேளையில் முள்ளிவாய்க்கால் சம்பவங்களுக்கு பொறுப்புக் கூறும் தீர்மானம் சிலவேளைகளில் முக்கிய கட்டத்துக்கு நகர்த்தப்படலாம்; இந்த நேரத்தில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலிற்கு பின்னாலும் இலங்கை அரசாங்கம் இருக்கின்றது என்கின்ற சனல் 4 இன் ஆவணம், இலங்கைக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தலாம்; இலங்கை மீது இவ்வாறான நெருக்கடிகளை ஏற்படுத்துவதன் ஊடாக, இலங்கையை நவகாலனித்துவ பிடிக்குள் வைத்திருக்கலாம். – பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட சனல் 4 தொலைக்காட்சியின் வெளியீடுகளுக்கு பின்னாலுள்ள சர்வதேச அரசியல் நிரல்களை நாங்கள் தெளிவாக இவ்வாறுதான் புரிந்து கொள்ள வேண்டும்.



**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# பிரிக்ஸ் அமைப்பின் எழுச்சி உணர்த்துவது என்ன?



Prof. Prabhat Patnaik
Economist and Political Commentator

**தெ**ன்னாபிரிக்காவின் தலைநகரான ஜோகன்னஸ்பேர்க்கில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்க நாடுகளுடன் ஆர்ஜென்ரினா, எகிப்து, ஈரான், எத்தியோப்பியா, சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் இணைக்கப்பட்டுள்ளன. முறையாக இணைவதற்கான மனுவினை தாக்கல் செய்திருந்த 22 நாடுகளுள் இவை 6 இற்கு மட்டும் இணைவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டு, இணைப்பு நடந்துள்ளது. தற்போது, 'பிரிக்ஸ்' (BRICS) தலைமைப் பொறுப்பிற்கு வந்துள்ள தென் ஆப்பிரிக்கா, 40 நாடுகள் இணைய விருப்பம் தெரிவித்திருந்ததாக கூறுகிறது. (ஜி–20 அமைப்பை விட) ஏன் திடீரென்று பிரிக்ஸ் இத்தனை ஈர்ப்பினை பெற்றது?

**வேறுபட்ட அமைப்பு**

பிரிக்ஸ் என்பது, உலக அமைப்புகளில் மிகவும் வேறுபட்ட அமைப்பு. ரஷ்யாவும் சீனாவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்கள்; இரத்து (வீட்டோ) அதிகாரத்துடன் கூடிய நாடுகள். இவற்றுள் ஒன்று, 'உயரடுக்கில்' உள்ள – அதாவது – ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறது. இன்னொன்று அவர்களது 'முக்கிய எதிரியாக' சித்தரிக்கப்பட்டுள்ளது. பிரிக்ஸின் பிற நாடுகள் இது வரை உலக விவகாரங்களில் பெரிய அளவிற்கு முக்கியப் பங்கு வகித்ததில்லை. எனவே, இன்றைக்கு பிரிக்ஸில் மற்ற நாடுகள் இணைவதற்கான நோக்கம், உலக அரசியல் அரங்கில் தங்களுக்கு பெரிய முக்கியத்துவம் வேண்டி அல்ல. மாறாக, தற்போது அவர்களுக்குத் தேவைப்படுவது அரசியல் பொருளாதாரத்துடன் கூடிய மீட்சி சார்ந்த வாய்ப்புகள்.

தற்போது உலகின் பல நாடுகள் எதிர்கொண்டுள்ள நெருக்கடியை முதலாளித்துவ பொருளாதார வல்லுநர்கள் கூட 'பொருள் சுழற்சி தேக்க நிலை' ("secular stagnation") என்று அழைக்கின்றனர். (பொருள் சுழற்சி தேக்கநிலை என்றால், சந்தை அடிப்படையிலான பொருளாதாரத்தில் பொருளாதார வளர்ச்சி மிகக் குறைவாக இருக்கும் நிலை அல்லது பொருளாதார வளர்ச்சியே இல்லாத நிலை, கிராக்கி இல்லாத நிலை.) இந்தச் சூழலில் இருந்து மீட்சி பெற பழைய சர்வதேச அமைப்புகள் மட்டும் போதுமானதல்ல. மேலும் ஏகாதிபத்திய நாடுகளால், அந்த பழைய அமைப்புகளை புதிய பொருளாதார சூழலுக்கேற்ற வகையில் மாற்றியமைக்கவோ அல்லது புதிய நிறுவன ஏற்பாடுகளை செய்யவோ முடியவில்லை. மாறாக, பிரிக்ஸ், இந்த வகையில் பல புதிய உறுதிமொழிகளை எடுத்துள்ளது. நெருக்கடியைச் சமாளிப்பதற்கான ஏகாதிபத்திய ஏற்பாட்டின் மீதான நம்பிக்கையின்மையின் வெளிப்பாடுதான் 40 நாடுகள் பிரிக்ஸில் இணைய விருப்பம் தெரிவிக்கக் காரணம்.

ஆனால், இதனால் மட்டும் பிரிக்ஸ் என்பது "ஏகாதிபத்திய எதிர்ப்பு" குழுவாக மாறிவிடாது. அதில் உள்ள சில நாடுகள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானவை என்பதில் நமக்கு சந்தேகமில்லை. அதே நேரத்தில் எகிப்து, எத்தியோப்பியா, சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யும் என்று நாம் கனவில் கூட, எந்த கற்பனையிலும் கூட நினைத்துப் பார்க்க முடியாது. அவை பிரிக்ஸில் இணைவது ஏகாதிபத்தியத்திற்கு எதிரானதாக இல்லாவிட்டாலும், வரும் நாட்களில் அவர்களுக்கு முக்கியமான ஆதரவை பிரிக்ஸ் வழங்க முடியும் என்ற நம்பிக்கைதான்.

**மூன்று வகையான நாடுகள்**

பிரிக்ஸில் தற்போது மூன்று வெவ்வேறு வகையான நாடுகள் உள்ளன.
1. ஏகாதிபத்தியம் தன்னிச்சையாக சில 'தடைகளை' அல்லது தண்டனையாக பாதுகாப்பு நடவடிக்கைகளை விதித்துள்ள நாடுகள்
2. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் நாடுகள்
3. தற்போதைய உலக நெருக்கடியின் மத்தியில் ஏற்கனவே சிரமங்களை அனுபவித்து வரும் அல்லது வரும்

நாட்களில் அவ்வாறு அனுபவிக்கவிருக்கும் நாடுகள். சீனா, ரஷ்யா மற்றும் ஈரான் ஆகியவை முதல் வகையை சேர்ந்தவை. ரஷ்யா, ஈரான், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இரண்டாவது வகையை சேர்ந்தவை. எகிப்து, எத்தியோப்பியா, ஆர்ஜென்ரீனா மூன்றாவது வகையை சேர்ந்தவை (பிரேசில் மற்றும் இந்தியா ஆகியவை விரிவடையும் நெருக்கடியைப் பற்றி கவலைப்பட்டு மாற்று ஏற்பாடுகளில் ஆர்வமாக உள்ளவை).

**ஈரானின் முக்கியத்துவம்**

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் அனுமதி இல்லாமல் கூட விதிக்கப்படும் ஒருதலைப்பட்ச ஏகாதிபத்திய தடைகளுக்கு உட்பட்ட நாடுகள், அந்த தடைகளைக் கடந்து செல்வதற்கான சாத்தியப்படும் ஏற்பாடுகளை பிரிக்ஸ் செய்து கொடுக்கிறது. அந்த வகையில் பிரிக்ஸ் அமைப்பில் ஈரானைச் சேர்ப்பது ஜோகன்னஸ்பேர்க் உச்சிமாநாட்டில் எடுக்கப்பட்ட வேறு எந்த நடவடிக்கையையும் விட முக்கியமானது ஆகும். ஈரான் கடுமையான பொருளாதாரத் தடைகளுக்கு இலக்கானது மட்டுமல்லாமல், உலகப் பெருநகர வங்கிகளில் வைத்திருக்கும் தனது சொந்த அந்நியச் செலாவணி இருப்புகளை அணுகுவதில் கூட அனுமதி மறுக்கப்பட்ட முதலாவது நாடு ஆகும். உக்ரைன் போருக்குப் பிறகு ரஷ்யாவும் இத்தகைய கடும் தடைகளுக்கு இலக்கானது சமீபத்திய உதாரணம் ஆகும்.

**எண்ணெய் நாடுகளின் வியூகம்**

உலக மந்தநிலை காரணமாக எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் நாடுகள், விலை வீழ்ச்சியடைவதைக் கண்டு, உற்பத்தியைக் குறைத்து விலைகளை உயர்த்த முயற்சிக்கின்றன. இது அமெரிக்காவின் விருப்பத்திற்கு எதிரானது. உண்மையில், இப்பிரச்சனையில் சவூதி அரேபியாவிற்கு அமெரிக்கா அளித்த நிர்ப்பந்தம் பலனளிக்கவில்லை. எதிர்காலத்தில், எண்ணெய் உற்பத்தி செய்யும் சவூதி அரேபியா உள்ளிட்ட 'ஒபெக்' நாடுகள் அமெரிக்காவின் விருப்பத்திற்கு மாறாக எண்ணெய் உற்பத்தி குறித்த முடிவினை சுயமாக எடுக்க வேண்டுமென்றால், போதுமான சுயாட்சியைப் பெற்றிருக்க வேண்டும். அதற்கு அமெரிக்காவிற்கு விரோதமாக இருக்க வேண்டிய அவசியமின்றி, அமெரிக்காவை மட்டுமே சார்ந்திருப்பதில் இருந்து வெளியே வந்து விட்டால் பாதுகாப்பானது என்று அந்த நாடுகள் நினைத்ததன் வெளிப்பாடுதான் பிரிக்ஸ் அமைப்பில் சேர்வது என்ற முடிவு.

**டொலரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபடுவது**

மூன்றாவது வகை நாடுகளான எகிப்து, ஆர்ஜென்ரீனா, எத்தியோப்பியா ஆகியவை கடுமையாக நலிவடைந்துள்ள பொருளாதாரங்களைக் கொண்டவை. பிரேசில், இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் பொருளாதாரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நாடுகளுக்கு பிரிக்ஸ் மீதான ஈர்ப்பு, டொலரைக் கடந்து உள்ளூர் நாணயங்களில் வர்த்தகம் செய்து கொள்ளலாம் என்ற வாய்ப்பு. இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தைப் போலவே பிரேசிலும் சீனாவும் சமீபத்தில் அத்தகைய உள்ளூர் நாணய வர்த்தக ஏற்பாட்டில் நுழைந்துள்ளன. வரவிருக்கும் நாட்களில் பிரிக்ஸ் உறுப்பினர்களிடையே இதுபோன்ற பல ஏற்பாடுகள் சாத்தியமாகும் என்பது தான், இந்த நாடுகள் பிரிக்ஸில் சேருவதற்கான முக்கிய ஈர்ப்பாகும். அத்தகைய ஏற்பாடுகளுக்குள் நுழையும் நாடுகளுக்கிடையிலான ஒப்பீட்டு நாணய மதிப்புகள் (relative currency values - பிற வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக வர்த்தகம் செய்யும்போது அல்லது பொருட்களை வர்த்தகம் செய்ய பயன்படுத்தப்படும் போது ஒரு நாணயத்தின் வாங்கும் திறன்) நிலையானதாக இருக்கும். வர்த்தக பரிமாற்றங்களை மேற்கொள்ள அமெரிக்க நாணயமான டொலர் தேவைப்படாது. இத்தகைய ஏற்பாடுகளின் காரணமாக, டொலர் பற்றாக்குறையால் வர்த்தகம் தடைபடாமல், இந்த நாடுகளில் புழங்கும் நாணயத்தின் இருப்பையே திறம்பட விரிவுபடுத்துவதன் மூலமும், அந்த நாடுகள் சொந்தமாக எடுக்கின்ற முடிவுகளின் அடிப்படையில் நாணய விநியோகத்தை அதிகரிப்பதன் மூலமும் வர்த்தகத்தை தடைபடாமல் நடத்துவதை எளிதாக்கும்.

**இன்னும் முன்னேற வேண்டும்**

இருப்பினும் இது, ஒரு பாதி பிரச்சனைக்குத் தான் விடையளிக்கிறது. காரணம், இத்தகைய உள்ளூர் நாணயங்கள் மூலமான வர்த்தகம், உலகப் பொருளாதாரத்தில் உள்ளூர் பணப்புழக்கத்தின் இருப்பை விரிவுபடுத்துகிறதே தவிர, அத்தகைய ஏற்பாட்டிற்குள் நுழையும் நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தால் எழும் வெளிநாட்டுக் கடனின் சிக்கலைச் சமாளிக்காது. எனவே, பிரிக்ஸ், இருதரப்பு வர்த்தக ஏற்பாடுகளை ஊக்குவிக்கும் போது, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி பற்றாக்குறையுடன் இருக்கும் நாட்டின் கடன் சுமையை அதிகரித்துக் குவிப்பதற்கு பதில், அந்த நாட்டிலிருந்து அதிகமான பொருட்களை வாங்கி வர்த்தகம் செய்வதன் மூலம் அந்த நாட்டின் நிலுவைகள் தீர்க்கப்பட வாய்ப்பு ஏற்படும். அப்போது, அது உலகப் பொருளாதாரத்தின் செயல்பாட்டை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யும். அப்படிச் செய்யுமானால், அது ஏகாதிபத்திய மேலாதிக்க உலகப் பொருளாதார 'ஒழுங்கிற்கு' உண்மையான மாற்றாக அமையும்.

**ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் பிடி தளரும்**


பிரிக்ஸ் வங்கியின் புதிய இயக்குநரும், பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதியுமான தில்மா ரூசெப் (Dilma Rousseff) – பொதுவாக மூன்றாம் உலக நாடுகளுக்கோ அல்லது உறுப்பு நாடுகளுக்கோ கடனைத் தீர்ப்பதற்கான கடனை வழங்குவதோ அல்லது சேவைக்காக கடன் வழங்குவதோ இந்த வங்கியின் நோக்கம் இல்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால் உள்ளூர் நாணயம் மூலமான வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கும், மூன்றாம் உலக நாடுகளின் உள்கட்டமைப்பிற்கும் இந்த வங்கி கடன் வழங்கும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். இந்த நடவடிக்கையே ஏகாதிபத்திய ஆதிக்க நிறுவனங்களின் பிடியை தளர்த்த உதவும்.

**நன்றி: பீப்பிள்ஸ் டெமாக்ரசி (ஓகஸ்ட்31, 2023)**

**சுருக்கமாக தமிழில்: ஆர்.எஸ்.செண்பகம்**

*ஒவ்வொரு காலகட்டத்தையும் ஆளும் கருத்துக்கள், அதை ஆளும் வர்க்கத்தின் கருத்துக்களாகவே இருந்தன.*
***-கார்ல் மார்க்ஸ்***

# மீண்டும் குழப்புவதற்குத் தயாராகிறது தமிழ் தேசியக் கூட்டமைப்பு!




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து சில முயற்சிகளை எடுத்து வருகின்றார். இந்த முயற்சிகளை அவர் உளப்பூர்வமான விருப்பத்துடன் எடுத்து வருகிறாரா அல்லது சில தரப்புகளின் நிர்ப்பந்தம் காரணமாக எடுத்து வருகிறாரா என்பது இப்போது தேவையற்ற விவாதம்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தற்போதுள்ள நிலையில் இருப்பதில் சிறந்ததும், அரசியல் அமைப்பில் இடம் பெற்றிருப்பதும், நடைமுறைச் சாத்தியமானதுமான தீர்வு 13 ஆவது திருத்தச் சட்டமே.

ஆனால், வழமைபோல, தமிழ் மக்களின் பிரதான தலைமையான தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியின் இந்த முயற்சியை குழப்புவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. முதலில், ஜனாதிபதி கூட்டிய தமிழ் கட்சிகளுடனான கூட்டத்தில் பங்குபற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதியின் நடவடிக்கை ஒரு ஏமாற்று முயற்சி என எவ்வித முகாந்திரமும் இல்லாமல் கூறி, ஜனாதிபதியின் கடும் சீற்றத்துக்கும் ஏச்சுக்கும் ஆளானார். அதன் பின் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் சம்பந்தனின் பாணியில் ‘ஜனாதிபதியின் நடவடிக்கை ஒரு ஏமாற்று நாடகம்’ என அறிக்கை விடுத்தார். இப்படியான கருத்துகள் காலத்துக்கு முந்தைய குழப்ப முயற்சிகள் என்பது சிறு பிள்ளைக்குக்கூட விளங்கும்.

மறுபக்கத்தில் ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளுக்கு கடும்போக்கு சிங்கள பேரினவாதிகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்பும் கிளம்பியுள்ளது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் பற்றியெரிகிற சிங்கள இனவாதத் தீயில் எண்ணெய் ஊற்றுவது போல, ‘தமிழ் மக்கள் விரும்புவது சுய நிர்ணய அடிப்படையிலான சமஸ்டித் தீர்வையே. எனவே அதன் அடிப்படையில் தமிழ் மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்’ என சம்பந்தன் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஏற்கெனவே சிங்கள அரசியல்வாதிகளிடம் தமிழ்த் தலைமை பற்றி ஒரு கதை இருக்கிறது. அதாவது, ‘இவர்களுக்கு மாகாண சபை கொடுத்தால் சமஸ்டி கேட்பார்கள். சமஸ்டி கொடுத்தால் தனிநாடு கேட்பார்கள்’ என்பதே அந்தக் கதை. அவர்கள் சொல்வதை மெய்ப்பிப்பது போல சம்பந்தனின் கடித எழுத்து இருக்கிறது.

இந்த பிற்போக்கு தமிழ் இனவாதத் தலைமையைப் பொறுத்தவரை, அவர்களது ஒரேயொரு நோக்கம், தமிழ் மக்களுக்கென என்ன தீர்வு வந்தாலும் அதைக் குழப்பியடித்து நடைமுறைப்படுத்த விடாமல் தடுப்பதே. அதன் மூலம் தமது இனவாத அரசியல் இருப்பைத் தொடர்ந்தும் பேணிப் பாதுகாப்பதே.

அதனால்தான் முதல் தீர்வான பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த விடாமல் ஐக்கிய தேசியக் கட்சி குழப்பிய போது அதற்கு உறுதுணையாகச் செயல்பட்டார்கள்.

இந்திய – இலங்கை உடன்படிக்கை மூலம் அரசியல் அமைப்பில் 13 ஆவது திருத்தம் செய்யப்பட்டு மாகாண சபைகள் உருவான போது பிரேமதாசவுடனும் புலிகளுடனும் சேர்ந்து அதையும் எதிர்த்தார்கள்.

பின்னர் சந்திரிக சமஸ்டிக்கு ஒப்பான தீர்வுத் திட்டத்தை முன்வைத்த போது, அதை ஐ.தே.கவுடனும் புலிகளுடனும் சேர்ந்து குழப்பி நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்தார்கள்.

அந்த ருசியில் இப்பொழுது ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் முயற்சிகளையும் குழப்பும் எத்தனத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதென்றால் இருக்கின்ற ஒரேயொரு வழி இந்த தமிழ் இனவாதக் கும்பலையும், இவர்களின் மறுமுனை சகபாடிகளான சிங்கள இனவாதக் கும்பலையும் ஒருங்குசேர பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவதுதான்.

---

பேசத் தகுந்த மனிதரோடு பேசத் தவறி விட்டால், நாங்கள் அவரை இழந்து விடுகிறோம். பேசத் தகாத மனிதரோடு பேசினால், எமது வார்த்தைகள் பயனற்று வீணாகி விடுகின்றன. அறிவாளி என்பவன் நல்ல மனிதரையும் இழக்க மாட்டான்; வார்த்தைகளையும் வீணாக்க மாட்டான்.

இலக்குகளை அடைய முடியாது என்று தெரியும்போது, எமது செயல்பாட்டு முறையினை சரி செய்ய வேண்டுமே தவிர, இலக்குகளை சரி செய்யக்கூடாது.

இருட்டை சபித்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு ஒருசிறு மெழுகுவர்த்தியை ஏற்றுங்கள்.

**–சீன தத்துவஞானி கன்பூசியஸ்**

---

**9ம் பக்கத்தொடர்ச்சி...**

வெளியிட்டுள்ள விரிவான ஆணையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆணை மூலம் இடதுசாரிக் கோட்பாடுகளுக்கு எதிரான வெறுப்புணர்வை மாணவர்கள் மத்தியில் விதைக்கும் சதிவேலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று இடதுசாரி அரசியல் பார்வையாளர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

# சிலியின் படிப்பினைகள்



**Salvador Allende**

50 ஆண்டுகளுக்கு முன்பு, 1973 செப்ரெம்பர் 11 ஆம் திகதி சிலி (Chile) நாட்டின் இராணுவ அதிகாரிகள் சிலர் அந்த நாட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருந்த அரசாங்கத்துக்கு எதிராக ஒரு இராணுவச் சதியை நடத்தி ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொண்டார்கள்.

இந்தச் சதி நடவடிக்கையின் போது இராணுவ சதிகாரர்கள் சிலியின் இடதுசாரி ஜனாதிபதி சல்வடோர் அலேன்டே (Salvador Allende), உலகப் பிரசித்தி பெற்ற சிலி கவிஞர் பப்லோ நெருடா (Pablo Neruda), பிரபல பாடலாசிரியர் விக்ரர் ஜாரா (Victor Jara) ஆகியோரைப் படுகொலை செய்தனர்.

அத்துடன், அதைத் தொடர்ந்த மாதங்களில் இராணுவச் சதிகாரர்கள் அலெண்டேயின் முக்கியமான ஆதரவாளர்கள் 3,000 பேரையும் படுகொலை செய்தனர்.

இராணுவச் சதியைத் தொடர்ந்து சிலியின் இராணுவ ஜெனரல்களில் ஒருவனான அகஸ்ரோ பினொசெற் (Augusto Pinochet) என்பவன் ஆட்சி அதிகாரத் தலைவனாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டான். அவனது 17 வருட இராணுவ சர்வாதிகார கொடுங்கோல் ஆட்சியில் பல பத்தாயிரக்கணக்கான சிலி மக்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதுடன், சிறையிலும் அடைக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் நாட்டை விட்டுத் தப்பியோடினர்.

பினோசெற் நடத்திய இந்த இராணுவச் சதியின் பின்னணியில் அமெரிக்க அரசாங்கம், அமெரிக்க உளவு அமைப்பான சீ.ஐ.ஏ., அமெரிக்க இராணுவ அதிகாரிகள், பல்தேசியக் கொம்பனிகள் என்பன இருந்ததாக பின்னர் பல கட்டுரைகளில் கூறப்பட்டிருக்கிறது. முக்கியமாக அன்றைய அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹென்றி கீஸிங்கர் (Henry Kissinger) இந்த இராணுவச் சதிக்கான திட்டத்தை வகுத்து முழு நடவடிக்கையையும் வழி நடத்தினார். ஆட்சிக் கவிழ்ப்பின் பிரதான நோக்கத்திற்கமைய பினோசெற் அரசாங்கம் பின்னர் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு நாட்டின் கதவுகளை அகலத் திறந்துவிட்டது.

இராணுவ சர்வாதிகாரி பினோசெற்றின் 17 வருட ஆட்சிக்காலம் முழுவதும் சிலியின் தொழிலாளர்கள், விவசாயிகள், பழங்குடி மக்கள், அறிவுஜீவிகள், கலைஞர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் என அனைவரும் கடுமையான அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர். அதே நேரத்தில் இந்தக் காலகட்டத்தில் உலகம் முழுவதும் இருந்த முற்போக்கு சக்திகள் சிலி மக்களுக்கு தமது ஒருமைப்பாட்டைத் தொடர்ந்து தெரிவித்து வந்தனர்.

அதே வேளையில் அலேன்டேயின் பிரசித்தமான ஐக்கிய அரசாங்கம் (Popular Unity Government) தேர்தல் மூலம் சிலியில் சோசலிசத்தைக் கொண்டு வருவதற்கு எடுத்த முயற்சிகளையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் உலகம் முழுவதும் இருந்த புரட்சிகர சக்திகள் அவதானித்து வந்தனர். முக்கியமாக ஒரு முதலாளித்துவ சமூகத்தில் சோசலிச ஆதரவுள்ள ஒரு ஜனாதிபதியும், அவருக்கு ஆதரவான கட்சியும் அதிகாரத்தில் இருக்கும் போது ஏற்படக்கூடிய எதிர் விளைவுகளை புரட்சிகர சக்திகள் அவதானித்தன.

பொதுவாக ஒரு முதலாளித்துவ சமூகத்தில் வங்கிகள், பெரிய பல்தேசியக் கொம்பனிகள், ஊடகங்கள் என்பனவும், அரச அதிகார அமைப்புகளான இராணுவம், பொலிஸ், நீதிமன்றங்கள், அதிகார வர்க்கம் என்பனவும் முதலாளித்துவ சக்திகளின் கட்டுப்பாட்டிலேயே இருப்பது வழமை.

அலேன்டே 1970 இல் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தபோது அவருக்கு போதிய மக்கள் ஆதரவு இருந்தது. ஆனால் அரச அதிகாரம், குறிப்பாக இராணுவம், பொலிஸ் என்பன முதலாளித்துவ சக்திகளின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இருந்து வந்தது. அத்துடன் மேலதிகமாக அமெரிக்காவின் ஆதரவு இராணுவத்திலிருந்த வலதுசாரி சக்திகளுக்கு இருந்தது.

ஒரு முதலாளித்துவ அரசை மக்கள் கிளர்ச்சியின் மூலம் தூக்கி எறிந்து அதன் இடத்தில் ஒரு சோசலிச அரசை நிறுவும் போது, அந்த அரசுக்கு தொழிலாளி வர்க்கத்தினதும் அவர்களால் உருவாக்கப்பட்ட மக்கள் ஆயுதப் படையினதும் ஆதரவு இருப்பதுதான் அதன் இருப்புக்கு அத்தியாவசியமானது. இந்தக் கருத்தை 1871 இல் நடைபெற்ற பரீஸ் கம்யூன் எழுச்சியின் அனுபவத்திற்குப் பின்னர் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். இதே கருத்தை தோழர் லெனினும் ரஸ்யாவில் 1917 ஒக்டோபர் புரட்சிக்கு முன்னரும் பின்னரும் வலியுறுத்தி இருக்கிறார்.

புரட்சிவாதிகள் சிலி எதிர்ப் புரட்சியில் இருந்து பெற வேண்டிய இன்னொரு ஒரு பாடமும் இருக்கின்றது. அதாவது, அமெரிக்க அரசாங்கம் உலகம் முழுவதும் நடைபெறும் எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த நெறியாளராக இருக்கின்றது. அது ஏகாதிபத்தியம் உலகம் முழுவதும் நடத்தும் கொள்ளையைப் பாதுகாக்கின்றது. அப்படிப் பாதுகாப்பதற்கு சகல விதமான வன்முறைகளும் கையாளப்பட வேண்டும் என்பது அதனது கருத்தாகும்.

அலேன்டே 1970 இல் ஆட்சிக்கு

வந்ததும் சிலியில் இருந்த அமெரிக்க செப்பு (Copper) நிறுவனங்களைத் தேசியமயமாக்கினார். அதேபோல, சிலியில் செயல்பட்டு வந்த ஏகாதிபத்திய தொலைத் தொடர்பு நிறுவனங்களின் ஏகபோகத்துக்கும் ஆப்பு வைத்தார். அப்பொழுதே அலேன்டேயை பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என அமெரிக்கா தீர்மானித்துவிட்டது. அதற்கு முன்னோடியாக அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் சிலிக்கு அருகில் உள்ள கடல் பகுதியில் ரோந்து சுற்றத் தொடங்கிவிட்டன.

அமெரிக்கா சிலியில் மட்டுமின்றி, பிற தென் அமெரிக்க நாடுகளான ஆர்ஜன்ரினா, எல் சல்வடோர், நிக்கரக்குவா, கௌத்தமாலா, ஹொண்டுராஸ் போன்ற நாடுகளிலும் இத்தகைய நடவடிக்கைகளை வெவ்வேறு வடிவங்களில் மேற்கொண்டிருக்கிறது.

இன்று அமெரிக்கா தனது உலக ஆதிக்கத்தைப் பாதுகாப்பதற்காக பல நூற்றுக்கணக்கான இராணுவத் தளங்களை அனைத்துக் கண்டங்களிலும்நிறுவி வைத்திருக்கிறது. அது மாத்திரமின்றி, தனக்குப் பிடிக்காத நாடுகளை வீழ்த்துவதற்கு பொருளாதார மற்றும் தடைகளையும் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றது.

50 ஆண்டுகளுக்கு முன்னர் சிலியில் ஏற்பட்ட இராணுவ எதிர்ப் புரட்சியின் அனுபவங்களை தொகுத்துப் பார்க்கையில், ஒரு நாட்டில் சோசலிசத்தை நிறுவுவதானால், தொழிலாளர்கள் – விவசாயிகளின் ஆதரவுடன் அரசு அமைவதுடன், அந்த அரசைப் பாதுகாப்பதற்கான மக்கள் ஆயுதப் படைகளும் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இது ஒரு அடிப்படை மார்க்சிய விதியும் கூட.

(இந்தக் கட்டுரை Workers World என்ற பத்திரிகையில் வந்த ஒரு கட்டுரையின் சாராம்சமாகும்)

# கூட்டு உழைப்பு மூலம் பொருளாதார தடையை முறியடிக்கத் திட்டமிடும் கியூபா

அமெரிக்காவின் பொருளாதார தடைகளால் ஏற்பட்டுள்ள பாதிப்பு களை சரிசெய்ய, விவசாய உற்பத்திப் புரட்சிக்கு கியூப அரசு திட்ட மிட்டுள்ளது. “நாட்டின் விவசாய உற்பத்தியை மாற்றியமைத்து வலுப்படுத்துவது மற்றும் விவசாயத் துறையில் உற்பத்திப் புரட்சியை முன்னெடுக்கும் ஓர் அரசியல் மற்றும் கூட்டு இயக்கத்தை” தொடங்குவது குறித்து விவாதிக்கப்பட்டுள்ளதாக கியூப அரசு தெரிவித்துள்ளது. உணவு உற்பத்தி, மின்சார உற்பத்தி, அதிகரித்து வரும் பணவீக்கம், விலையுயர்வு போன்ற அத்தியாவசிய பிரச்சனைகள் குறித்து தீவிரமான விவாதம் நடத்தப்பட்ட பின் - குறிப்பாக உணவு உற்பத்தியை அதிகரித்து நாட்டின் செல்வத்தை உருவாக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள தாக கியூப ஜனாதிபதி மிகுயேல் டியாஸ் - கேனல் (Miguel Díaz-Canel) கூறியுள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஒவ்வொரு கியூப மக்களும் முட்டை, மாமிசம், பால் உள்ளிட்ட விலங்கு உணவுப் பொருட்களில் இருந்து எடுக்கப்படும் புரதங்களில் 438 கிராம் மட்டுமே எடுத்துள்ளனர் இது 2023 மே மாதத்தில் 347 கிராமாக மட்டுமே இருக்கிறது. ஆனால் சராசரியாக ஒரு மாதத்திற்கு இவர்கள் 5 கிலோ புரதத்தை உட்கொண்டு இருக்க வேண்டும். இதற்கு காரணம் இறைச்சிக்காக தொழில்முறையில் கோழிகள் மற்றும் பிற விலங்குகள் வளர்ப்பதில் பிரச்சனைகள் இருந்துள்ளது என்பது தான். அதாவது அமெரிக்கா ஏற்படுத்திய பொருளாதார முடக்கத்தால் கால்நடைத் தீவனத்திற்கான மக்காச் சோளம், சோயா, சோளம் மற்றும் பிற பயிர்களின் விளைச்சலுக்குத் தேவையான உரங்களை இறக்குமதி செய்ய முடியவில்லை. இதனால் இவற்றின் விளைச்சல் குறைந்து கால்நடைகளுக்கு போதுமான தீவனத்தை உறுதிப்படுத்த இயலாமல் போயுள்ளது. இதன் காரணமாக அதிக புரதச்சத்து வழங்கும் பன்றி இறைச்சி, பால் பொருட்கள் உள்ளிட்டவற்றின் உற்பத்தி குறைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் இதுவரை எதிர்பார்க்கப்பட்ட டீசல் எரிபொருளில் 68% மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 14,700 தொன் குறைவு. 28,900 தொன் உரங்கள் இறக்குமதிக்கு திட்டமிட்ட நிலையில் வெறும் 168 தொன்கள்தான் இறக்குமதி செய்ய வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளால் ஏற்பட்டுள்ள மூலப்பொருட்கள் தட்டுப்பாட்டால் கடந்த ஆண்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 9,600 தொன் உரங்களைக் கூட இந்த ஆண்டு உற்பத்தி செய்ய முடியவில்லை. கியூபாவின் இந்த உணவுப் பற்றாக்குறையை திட்டமிட்ட அமெரிக்கத் தலைவீடே உருவாக்கியுள்ளது. 1960 இல் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் லெஸ்டர் மல்லோரி (Lester Mallory), இடதுசாரிகள் ஆளும் நாடுகளை கவிழ்க்க பொருளாதார முற்றுகைத் திட்டத்தை முன்மொழிந்தார். அதாவது பொருளாதார தடைகள் மூலம் இடதுசாரிகள் ஆளும் நாடுகளில் பஞ்சத்தை உருவாக்கி அரசின் மீது மக்களுக்கு விரக்தியை ஏற்படுத்தி அந்நாட்டு வலதுசாரிகள் மூலம் ஆட்சியை கவிழ்த்து பிறகு அந்நாட்டை அமெரிக்கா தன் ஆசைக்கு ஏற்ப சுரண்டும். கியூபா மட்டுமின்றி பல நாடுகள் இந்த தடைகளால் முடக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் இந்த பொருளாதார முடக்கத்தினை கியூப மக்களுடன் இணைந்த கூட்டு உழைப்பின் மூலம் எதிர்கொள்ள அந்நாட்டின் அரசு தீவிர முனைப்பில் ஈடுபட்டுள்ளது.


## கியூபாவில் சீ.ஐ.ஏ.!

தம்மை “சுயாதீன ஊடகவியலாளர்கள்” என அழைத்துக்கொள்ளும் கியூபாவிலுள்ள அரச விரோத பிரச்சாரகர்களுக்கு அமெரிக்கா மறைமுகமாக நிதியுதவி அளித்து வருவதாக 2000 முதல் 2004 வரை லத்தீன் அமெரிக்காவுக்கான மிகவும் சிரேஸ்ட அமெரிக்கப் புலனாய்வாளரான Fulton Armstrong என்பவர் குறிப்பிட்டிருக்கிறார். பிரித்தானிய செய்தித்தாளான ‘த காடியன்’ (The Guardian) உடன் பேசும்போதே அவர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார். ஃபுல்ரன் அமெரிக்க உளவு அமைப்பான சீ.ஐ.ஏவின் மூத்த பணியாளராவார்.

மேலும் அவர் கூறுகையில், இன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் கியூபாவில் ‘ஜனநாயகத்தை முன்னேற்றும் நடவடிக்கைகளுக்காக’ வருடாந்தம் ஒதுக்கியுள்ள தொகை சுமார் 20 மில்லியன் டொலர்கள் ஆகும் எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...

# ‘ஓப்பன்ஹைமர்’ திரைப்படம்



**அல்பேர்ட் ஐன்ஸ்ரைனும் ஓப்பன்ஹைமரும்**

ஹிரோஷிமா (Hiroshima), நாகசாகி (Nagasaki) நகரங்களின் மீது அமெரிக்கா வீசிய அணு குண்டு, அதனால் ஏற்பட்ட பேரழிவு குறித்து இன்னமும் உலகளவில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ‘யுத்தம் வேண்டாம், வேண்டும் சமாதானம்’ என்ற முழக்கத்தோடு, சமாதானத்திற்காக குரல் எழுப்பிடும் இயக்கங்கள் ஓய்வில்லாமல் நடந்து கொண்டிருக்கின்றன. அணுகுண்டு தயாரிப்பில் அடங்கியுள்ள அரசியல்–அறிவியல் இரண்டிற்கும் இடையிலான குறுக்குவெட்டுப் பார்வையை கருவாக வைத்து 180 நிமிட நீளங்கொண்ட ‘ஓப்பன்ஹைமர்’ (Oppenheimer) என்ற ஹொலிவுட் திரைப்படம் கடந்த ஜுலை மாதம் வெளியாகியுள்ளது.

ஓப்பன்ஹைமர் இந்தியாவில் வெளியான முதல்நாள் அன்று 90 ஆயிரம் ரிக்கெட்டுகள் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது. உலகப்புகழ் பெற்ற பிரிட்டிஷ்–அமெரிக்க இயக்குனர் கிறிஸ்டோபர் நோலன் (Christopher Nolan) திரைக்கதை, இயக்கத்தில் இப்படம் வெளிவந்துள்ளது. இப்படம் விஞ்ஞானி ஓப்பன்ஹைமரின் வாழ்க்கை வரலாறான, ‘American Prometheus: The Triumph and Tragedy of J. Robert Oppenheimer’ என்ற நூலை அடிப்படையாகக் கொண்டது. ஓப்பன்ஹைமராக அயர்லாந்து நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட நடிகர் சிலியன் மேர்ஃபி (Cillian Murphy) அபாரமாக நடித்திருக்கிறார்.

விஞ்ஞானி ஓப்பன்ஹைமர் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனியில் குவாண்டம் இயற்பியல் கற்று முனைவர் பட்டம் பெற்றவர். அணுகுண்டு உருவாக்கத்தில் முக்கிய அங்கமான குவாண்டம் இயற்பியலை (Quantum physics) அமெரிக்காவிற்கு அறிமுகப்படுத்தியவர் இவரே. இவரது அறிவியல் பின்புலத்தை அறிந்த அமெரிக்க அரசு, அணுகுண்டு தயாரிக்கும் மன்ஹாட்டன் திட்டத்தில் (Manhattan Project) அவரை ஈடுபடுத்தியது. அமெரிக்காவின் ஐந்தாவது நியு மெக்ஸிகோவில் (New Mexico) அணு ஆயுத தயாரிப்பிற்கான இரகசிய ஆய்வகத்தின் இயக்குனராக அவர் பணியாற்றினார். விஞ்ஞானியாக அணுகுண்டு உருவாக்கத்தில் பணியாற்றியபோது, அணுகுண்டால் ஏற்படக்கூடிய பேரழிவு அவரை உறுத்திக் கொண்டே இருந்தது. இது குறித்து நோபல் விருது பெற்ற அல்பேர்ட் ஐன்ஸ்ரைனுடன் (Albert Einstein) ஓப்பன்ஹைமர் விவாதிக்கும் கற்பனையான சுவாரஸ்யமான காட்சியும் படத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

மன்ஹாட்டன் திட்டத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் வரையில் பணியாற்றி இருக்கிறார்கள். உலகத்தையே தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயற்சித்த ஹிட்லரின் நாசிக்களை எதிர்த்தவர் ஓப்பன்ஹைமர். இவர் பேராசிரியராகப் பணியாற்றுகிறபோது, நாசிக்களை உறுதியாக எதிர்த்த அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருக்கமாக இருந்திருக்கிறார். அவருடைய மனைவி, சகோதரர் மற்றும் நெருங்கிய நண்பர்கள் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாக இருந்தார்கள். சோவியத் யூனியன் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தார் ஓப்பன்ஹைமர். ஸ்பானியாவின் உள்நாட்டு யுத்தத்தில் அந்நாட்டு மக்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பியவர்களில் இவரும் ஒருவர். இந்தப் படத்தில் ஓப்பன்ஹைமரின் கம்யூனிஸ ஆதரவு மனோநிலையை சரியாகப் பதிவு செய்திருக்கிறார் இயக்குனர் நோலன்.

இவருடைய அரசியல் கண்ணோட்டத்தை அமெரிக்க அரசு புரிந்திருந்தாலும், அணுகுண்டு தயாரிப்பதற்கான அறிவியல், தொழில்நுட்ப புலமை இவருக்கு உண்டு என்பதை அறிந்து, இவர்தான் இந்தத் திட்டத்திற்கு சரியானவர் என்ற நோக்கில், அமெரிக்க அரசு இந்தப் பொறுப்பை ஓப்பன்ஹைமரிடம் ஒப்படைக்கிறது. நாசிகளுக்கு எதிராக அணுகுண்டு ஆயுதம் பயன்படும் என்ற நோக்கம் ஓப்பன்ஹைமர் அணுகுண்டு திட்டத்தில் ஈடுபடக் காரணமாக இருந்திருக்கிறது.

## *ஜி.ராமகிருஷ்ணன்*

இரண்டாம் உலக யுத்தத்தில் ஹிட்லரை வீழ்த்தியதில் பெரும்பங்கு ஜோசப் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் யூனியனையே சாரும். அதிகமான உயிர்ச்சேதத்தையும், பொருட்சேதத்தையும் சோவியத் யூனியன் சந்தித்தது. மொஸ்கோ வரை சென்ற நாசிப் படைகளை விரட்டியடித்து, ஹிட்லரின் நாடாளுமன்ற கட்டிடமான றெயிச்ஸ்டாகில் (Reichstag) செம்படை செங்கொடி ஏற்றியது.

யுத்தத்தின் கடைசி கட்டத்தில், 1945 ஏப்ரல் 30 அன்று ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டான். மே 7 ஆம் திகதி நாசி படைகள் முற்றாக சரண் அடைந்தன. நாசிப்படைகளை வீழ்த்தியாகிவிட்டது, இனி அணு குண்டுகளைப் பயன்படுத்தத் தேவையில்லையென ஓப்பன்ஹைமர் உள்ளிட்ட விஞ்ஞானிகள் விவாதிக்கிறார்கள். யாரும் ஒருவரை ஒருவர் அழிப்பதற்காகப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக அணுகுண்டு தொழில்நுட்பத்தை சர்வதேச கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்று இவர்கள் பரிந்துரைக்கிறார்கள். ஆனால், இனி வரும் காலங்களில்

தன்னுடைய வல்லாதிக்கத்தை பறைசாற்றும் நோக்கில், ஜப்பான் மீது அணுகுண்டுகளை வீச அமெரிக்கா முடிவெடுக்கின்றது.

ஜப்பானின் எந்த இடத்தில் குண்டு போட்டு அழிப்பதென அமெரிக்க அதிகாரிகள் சகஜமாகப் பேசுகிற ஒரு காட்சியில், 'கியோட்டோ (Kyoto) நகரில் வீசுவோம். அழகிய நகரம் அது. நானும் எனது மனைவியும் அங்கு தேனிலவு சென்றோம்' என்று குரூரமாக ஒருவர் சொல்லும் காட்சி, ஏகாதிபத்திய அரசியலை குரூரத்தை உணர்த்துகிறது. இந்தக் கொடூரத்தைத் தான் நாங்கள் வியட்நாமில் கண்டோம்; ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் என்று உலகெங்கிலும் கண்டு வருகிறோம்.

மே மாதம் 7 ஆம் திகதி நாசிப்படைகள் முற்றாக சரணடைந்த போதும், ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதிதான் ஹிரோஷிமா மீது அமெரிக்கா குண்டு வீசியது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அதற்கடுத்தும் 9 ஆம் திகதி நாகசாகி மீது அடுத்த அணு குண்டை வீசியது. இரண்டு நகரங்களிலும் சுமார் 3 இலட்சத்திற்கும் மேலானோர் உருகி சாம்பலானார்கள். இரண்டு குண்டுகளும் இரண்டு வகையான தயாரிப்புகள் என்பதற்காகவே இரண்டு பகுதிகளில் அமெரிக்கா சோதித்தது. அணுகுண்டின் தந்தை என்று போற்றப்பட்ட விஞ்ஞானி ஓப்பன்ஹைமரை அழைத்து அமெரிக்க குடியரசுத் தலைவர் ட்ருமன் (Harry S. Truman) புளகாங்கிதம் அடைந்து பாராட்டுகிறார். ஆனால், ஓப்பன்ஹைமர் இறுகிய முகத்தோடு, 'என் கைகளில் இரத்தக்கறை படிந்துள்ளது' என்று அவரிடம் சொல்கிறார். அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் தன்னுடைய கைக்குட்டையை ஓப்பன்ஹைமரிடம் கொடுத்து துடைத்துக் கொள்ளுங்கள் என்கிறார். ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க அரசியலை, விஞ்ஞானியின் சமூகப் பார்வை ஊடாக அம்பலடுத்தும் இக்காட்சி படத்திலேயே உச்சபட்ச காட்சியாக அமைகின்றது.

1950களில் அமெரிக்காவில் கம்யூனிஸ்ட்களையும், கம்யூனிஸ ஆதரவாளர்களையும் வேட்டையாடும் வேலையை அமெரிக்க அரசாங்கம் செய்து வந்தது. செனட்டர் ஜோசப் மெக்கார்த்தி (Joseph McCarthy) இதற்கு வித்திட்டவரென்பதால் மெக்கார்த்தியிசம் (McCarthyism) என அக்காலத்தில் இந்த அணுகுமுறை அழைக்கப்பட்டது. 'அணுகுண்டின் தந்தை' என்று அமெரிக்க ஜனாதிபதியால் பாராட்டப்பட்ட ஓப்பன்ஹைமரை கம்யூனிஸ ஆதரவாளர் என்ற அடிப்படையில் விசாரணைக்கு உட்படுத்தி, அமெரிக்க சமூகத்தில் அவருடைய புகழுக்கு களங்கம் கற்பிக்கிறார்கள். ஒரு விஞ்ஞானி என்ற அடிப்படையில், தான் ஆற்றிய பணிகள் பற்றியும், அதே நேரத்தில் நாசி எதிர்ப்பாளர் என்ற அடிப்படையில், தான் கொண்ட நிலைப்பாட்டையும் உறுதியாக தெரிவிக்கிறார்.

ஏகாதிபத்தியம் தனது கோரமுகத்தை மாற்றிக்கொள்ளாது என்பதற்கிணங்க, விஞ்ஞானி ஓப்பன்ஹைமரை விசாரணை வலையத்திற்குள்ளேயே வைத்திருந்தது. அணுகுண்டு, அணு ஆயுதம் ஏற்படுத்திய பேரழிவு படத்தில் காட்சிப்படுத்தப்படவில்லை என்ற குறைபாடும் படத்தில் உள்ளது. சமாதானம் என்றைக்குமே ஏகாதிபத்தியத்தின் இலக்காக இருக்காது என்பதை கம்யூனிஸ ஆதரவு விஞ்ஞானியான ஓப்பன்ஹைமரின் இந்த வாழ்க்கை வரலாற்றுப் படம் எமக்கு உணர்த்துகின்றது.

# மார்க்சிய எதிர்ப்புப் பள்ளிகளை இழுத்து மூடுங்கள்

**வ**லதுசாரி ஜனாதிபதி ஜெய்ர் போல்சானரோ (Jair Messias Bolsonaro) பதவியில் இருந்தபோது தொடங்கப்பட்ட மார்க்சிய எதிர்ப்புக் கல்வி நிலையங்களை இழுத்து மூடுமாறு பிரேசில் அரசு ஆணையிட்டுள்ளது. சட்டவிரோதமாக, அமெரிக்கா மற்றும் பிற அந்நிய சக்திகளின் உதவியுடன் பிரேசிலின் ஜனாதிபதியாக ஜெய்ர் போல்சானரோ பொறுப்பேற்றார். அவரது ஆட்சிக்காலத்தில் அமேசான் காடுகளை அழிக்கும் பணி படு தீவிரமாக நடந்தது. அழிவுப் பணிக்குக் காவலாக இராணுவத்தையும், காவல்துறையையும் பயன்படுத்த அவர் தயாராக இருந்தார். அந்த இயற்கை வளங்களை பன்னாட்டுப் பெரு நிறுவனங்களுக்குத் தாரை வார்ப்பதை விரைவுபடுத்த விரும்பினார். மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்ற போல்சானரோவின் விருப்பத்தை மக்கள் நிராகரித்தனர். இடதுசாரிக் கொள்கைகளை முன்நிறுத்திய லூலா டி சில்வா தேர்வு செய்யப்பட்டார். பதவியேற்றதில் இருந்து நாட்டின் நலன்களை மீட்பதில் அவர் அக்கறை காட்டி வருகிறார். பிற தென் அமெரிக்க நாடுகளுடனான உறவுகளுக்கும், பிராந்திய ஒற்றுமைக்கும் அவர் பெரும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்.

போல்சானரோ ஜனாதிபதியாக இருந்த போது வேலைக்காக கற்பிப்போம் என்ற புதிய முழக்கத்துடன் கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டன. இராணுவத்திற்குத் தேவையான ஒழுக்கத்தைக் கல்வியுடன் சேர்த்துத் தரப்போவதாக அறிவித்தனர். அதே வேளையில், மார்க்சிய கலாச்சாரத்திற்கு எதிரான போதனைகள் அவர்களுக்குத் தரப்படும் என்றும் கூறினர். இத்தகைய பள்ளிகளை உருவாக்குவது அரசியல் நோக்கத்துடன்தான் என்பது இரண்டாவது அறிவிப்பில் அம்பலமானது. இந்தப் பள்ளிகளை மூடிவிடுமாறு ஜனாதிபதி லூலா டா சில்வா (Lula da Silva) ஆணை பிறப்பித்திருக்கிறார். இந்த ஆணை வெளியிடுவதற்கு முன்பாக, இந்தப் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து கல்வித்துறை ஆய்வு மேற்கொண்டது. இராணுவ முகாம்களில் இருக்கும் ஒழுக்கம் பள்ளியிலேயே தரப்பட வேண்டும் என்று இந்தத் திட்டத்தைத் தொடங்கும் போது போல்சானரோ கூறியிருந்தார். ஆனால் கல்வித்துறை மேற்கொண்ட ஆய்வில் அத்தகைய ஏற்பாடுகள் எதுவும் இல்லை என்று தெரிய வந்தது. 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையில் 216 பள்ளிகள் திறக்கப்பட்டன. இந்தப் பள்ளிகள் தனிநபர்களால் நடத்தப் பட்டன. அதே வேளையில் இராணுவ வீரர்கள் இந்தப் பள்ளிகளில் பணிபுரிந்து வந்தனர். பள்ளிகளுக்கான விதிகளை அவர்களே உருவாக்கிக் கொண்டார்கள். இடதுசாரிக் கருத்துகள், குறிப்பாக மார்க்சியக் கோட்பாடுகளுக்கு எதிரான போதனைகள் அங்கு வழங்கப்பட்டன.

இந்தக் கல்வியாண்டில் இருந்து அந்தப் பள்ளிகளில் பணியாற்றும் வீரர்கள் அவரவர் முகாம்களுக்கு அனுப்பப்படுவார்கள். கல்வியாண்டு நிறைவு பெறும் வரையில் பிற பள்ளிகளுக்கான விதிகளே இங்கும் கடைப்பிடிக்கப்படும். பாடத்திட்டங்களும், பிற கல்வி நிலையங்களில் உள்ளவையே இங்கும் கற்பிக்கப்படும் என்று கல்வித்துறை

**தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க...**

# சனாதனமும், பாரதமும்: ஆரிய மாயையின் வரலாற்று வடிவங்கள்!


அறிஞர் அண்ணா தன் நூலுக்கு 'ஆரிய மாயை' என்று பெயர் சூட்டக் காரணம் ஆரியம் பிறரை மயக்கி தன்னை ஏற்கச் செய்யும் தன்மை கொண்டது என்பதைக் குறிக்கத்தான். ஆரியம் என்று ஒன்றுமில்லை. அப்படி இருப்பது போல மாயத்தோற்றம் மட்டும்தான் இருக்கிறது என்ற பொருளில் அவர் அந்த பெயரைச் சூட்டவில்லை. ஆரியம் என்று ஒன்று இருக்கிறது. அது பிறருக்கு நன்மை தருவது போல தோற்றமளித்து அவர்களையும் தன் கருத்தியலை ஏற்கச் செய்கிறது என்பதைக் குறிக்கவே, அவர் ஆரிய மாயை என்று பெயர் வைத்தார். நாம் அந்த மாயைக்கு ஆட்படாமல், ஆரியத்தின் உண்மையான தன்மையை அறிய வேண்டும்.

நானும், நண்பர்கள் ரவீந்திரன், ஸ்ரீராமச்சந்திரன், வி.எம்.எஸ். சுபகுணராஜன் ஆகிய மூவரும் சேர்ந்து எழுதியுள்ள "Rule of the Commoner: DMK and the Formations of the Political in Tamil Nadu, 1949-1967" என்ற ஆய்வு நூலில் ஆரிய மாயை என்பதை Aryan Allure என்றுதான் மொழியாக்கம் செய்துள்ளோம். இதற்கு முன்பு செய்தவர்கள் Aryan Illusion என்று மொழியாக்கம் செய்தார்கள். அது தவறான பொருளாகும். ஆங்கிலத்தில் Allure என்றால் கவர்ந்திழுப்பது.

இன்று வரை ஆரியம் அதே வேலையைத்தான் செய்கிறது. இரண்டு வார்த்தைகளை வைத்துக்கொண்டு பெரும் மாய்மாலங்களை செய்கிறார்கள். ஒன்று சனாதனம். மற்றொன்று பாரதம். இரண்டுமே ஆரியர்கள் உருவாக்கிய சமஸ்கிருத மொழிச் சொற்கள். மற்ற மொழிகளிலும், தமிழிலும் புழங்குகின்றன என்றாலும். இந்த இரண்டு சொற்களை எவ்வாறு புரிந்து கொள்வது, அவை குறித்த சர்ச்சை என்ன, ஆரிய மாயை எப்படி செயல்படுகிறது என்பதை விரிவாகப் பார்ப்போம்.

**சனாதனம்**

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் ஒருங்கிணைத்த சனாதன ஒழிப்பு மாநாட்டில் பேசிய தி.மு.க இளைஞரணித் தலைவர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதனம் என்பதை டெங்கு, கொலரா, கொரோனா கிருமிகளை அழிப்பது போல அழிக்க வேண்டும் என்று அற்புதமாக



அறை கூவினார். திடீரென்று வானமே இடிந்து விழுந்தது போல அமித் ஷா முதல், உள்ளூர் அம்பிகள் வரை கொந்தளிக்கிறார்கள். நூற்றைம்பது ஆண்டுகளாக தமிழ்நாட்டில் சனாதன எதிர்ப்பு நிலவி வருகிறதே, இப்போது என்ன புதுப் பிரச்சினை என்று பார்த்தால், ஆரியத்தின் தகிடுதத்தங்களை அம்பலப்படுத்தலாம்.

## ராஜன் குறை

சனாதனம் என்பது காலத்தால் அழியாத உயர்நெறி. மனிதர்கள் மகிழ்ச்சியாக, அமைதியாக இணைந்து வாழ உதவும் ஒழுக்க நெறி. அதைப்போய் அழிக்கலாமா என்று தமிழ் தொலைக்காட்சிகளில் ஆரிய முகவர்கள் கேட்கிறார்கள். வட நாட்டில் சனாதன தர்மம் என்பதுதான் இந்து மதத்தின் பெயர். சனாதனத்தை அழிப்பது என்றால், இந்து மதத்தை அழிப்பது என்று பொருள் என்று மாய்மாலம் செய்கிறார்கள். இதில் ஏற்படும் குழப்பங்கள் கொஞ்ச, நஞ்சமல்ல.

தமிழ்நாட்டில் சனாதனம் என்பதன் பொருள் காலத்திற்குப் பொருந்தாத பத்தாம்பசலித்தனம். ஆங்கிலத்தில் Orthodoxy என்பார்கள். அதாவது மூடப் பழக்கங்களை விடாமல் கடைப்பிடிப்பது. மாற்றங்களை ஏற்க மறுப்பது. எல்லா காலங்களிலும் எல்லா மதங்களிலும், சமூகங்களிலும் மாற்றங்களை ஏற்பவர்கள் இருப்பார்கள். மாற்றங்களை ஏற்க மறுத்து பழைய பழக்க, வழக்கங்களையே பின்பற்ற வேண்டும் என்பவர்கள் இருப்பார்கள். இரண்டாவது வகையினர்தான் சனாதனி. அதனால்தான் சாதீயத்தை இன்றும் கடைப்பிடிப்பவர்களை சனாதனி என்கிறோம்.

சனாதனம் என்றால் அழியாத மானுடப் பொது நெறியா? சனாதனம் என்றால் இந்து மதமா? சனாதனம் என்றால் வர்ணாஸ்ரமம், சாதீயம் உள்ளிட்ட மூடப்பழக்க, வழக்கங்களா? இதில் எது சரி?

**சனாதனம் என்றால் அழியாத மானுடப் பொதுநெறியா?**

தமிழ்நாட்டு தொலைக்காட்சிகளில் பேசும் பல தினுசான சங்கிகள், பார்ப்பனர்கள் இவ்வாறு சனாதனம் என்றால் அழியாத மானுடப் பொது நெறி என்று பேசுகிறார்கள். சரி, அப்படி எந்த நூலில் கூறியுள்ளது, அதற்கான ஆதாரங்களைக் கூறுங்கள், அந்த நெறிகளுக்கான பட்டியலைக் கூறுங்கள் என்றால் ஏதேதோ பேசுகிறார்களே தவிர, இந்த நூலில் இந்த இடத்தில் இவைதான் நெறிகள், அவற்றின் பெயர்தான் சனாதன தர்மம் என்று சான்றாதாரம் காட்டவே மாட்டேன் என்கிறார்கள்.

அதற்கு மாறாக சனாதன தர்மம் என்றால் என்ன என்று புரிந்து கொள்ள உதவியாக அறிஞர் பொ.வேல்சாமி முகநூலில் பகிர்ந்திருந்த 1907ஆம் ஆண்டு வெளியான நூலைப் பார்க்கலாம். இந்த நூலை பலரும் தொலைக்காட்சி விவாதங்களில் மேற்கோள் காட்டுகிறார்கள். இந்த நூலானது "காசிப்பிரதான ஹிந்து வித்யாசாலையின் சம்ரஷணை கமிட்டியார் தம் ஆட்சிக்குட்பட்ட சகல வித்யாசாலைகளிலும் சிறுவர்க்கு மதம், நீதி இவ்விஷயங்கள் கற்பிக்கப்படுவதற்கு" உருவாக்கியது. மூலம் எந்த மொழியில் இருந்தது என்று தெரியாவிட்டாலும், தமிழில் மொழியாக்கம் செய்து 1907ஆம் ஆண்டு "ஸனாதன தர்மம்" என்ற பெயரில் பிராட்வே மினர்வா பிரஸ்ஸில் அச்சடிக்கப்பட்டதான குறிப்புடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்த நூலில் ஏராளமான சுவாரஸ்யமான விஷயங்கள் உள்ளன. இந்த நூலின் ஏழாம் அத்தியாயத்தில்

150 ஆவது பக்கத்தில் நான்கு வருணங்கள் என்பது விளக்கப்பட்டுள்ளது. சனாதன தர்மத்தின் மிக முக்கியமான அம்சமே மக்களை வர்ணங்களாகப் பிரித்திருப்பதுதான் என்று பெருமையாக நூல் கூறுகிறது. ஆனால், இதில் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம் சுவாரஸ்யமானது.

முதலில் நாம் மறுபிறவி கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆன்மா வேறு, சரீரம் என அழைக்கப்படும் உடல் வேறு. இந்த ஆன்மா என்பதுதான் குழந்தைப் பருவத்திலிருந்து ஒவ்வொரு பிறப்பின்போதும் மெள்ள ஒவ்வொரு வர்ணமாக வளர்ந்து வர வேண்டும். முதல் பிறவியில் அது குழந்தையாக இருக்கும்போது சூத்திர வர்ணத்தின் சரீரத்தில் பிறக்கும். அப்போது பிறர் சொற்படி கேட்டு, பிறருக்கு சேவை செய்ய வேண்டும்.

அப்படிச் சரியாக சேவை செய்தால் ‘பிரமோஷன்’ கிடைத்து வைசிய வர்ணத்தில் பிறக்கும் அடுத்து சத்திரிய வர்ணம் எல்லா பிறவிகளிலும் சரியாக நடந்து கொண்டால் ஆன்மா நல்ல முதிர்ச்சியடைந்து பிராமண வர்ணத்தில் பிறக்கும். அதில் சரியாக நடந்து கொண்டால் அது பிரபஞ்ச முதலாளியான ஈஸ்வரனுடன் கலந்து விடும். இல்லாவிட்டால் மீண்டும் பிறப்புதான்.

இந்த நூல் என்ன கவலைப்படுகிறது என்றால், சமகாலத்தில் ஒரு குறிப்பிட்ட நிலையில் (ஸ்திதியில்) உள்ள ஆன்மா, தவறான சரீரத்தில் பிறந்து விடுகிறது என்ற நிலையைத்தான். ஆரம்ப நிலையில் உள்ள ஆன்மா பிராமண உடலில் பிறந்து ஒழுங்காகச் செயல்படாமல் குழம்புகிறது. முதிர்ந்த நிலையில் உள்ள ஆன்மா சூத்திரர் உடலில் பிறந்ததால், பேசாமல் சேவை செய்யாமல் கலகம் செய்கிறது. இந்த ஆன்மா–உடல் தவறாக இணைந்து விடுவதில் நிறைய குழப்பம் நிகழ்கிறது என்று இந்த நூல் கூறுகிறது.

இதுதான் சனாதன தர்மத்தின் அடிப்படையா என்று கேட்டால், தமிழ் தொலைக்காட்சி பார்ப்பனர்கள், இல்லை இந்த நூல் இல்லை என்கிறார்கள். காஞ்சி சங்கராச்சாரியார் கூறியதை மேற்கோள் காட்டினால், அதுவும் இல்லை என்கிறார்கள். ஆனால் காலத்தால் அழியாத தர்மம் என்று கிளிப்பிள்ளைகள் போல சொல்கிறார்கள்.

சரி, ஊரிலுள்ள சாமியார்கள், சங்கராச்சாரியார்கள், ஜீயர்கள் (வைணவ சமயத்தின் மிகப்பெரிய மதகுரு ஜீயர் என்றழைக்கப்படுகிறார்) எல்லோரையும் கூட்டி இதுதான் 2023 ஆம் ஆண்டுக்கான சனாதன தர்மம் என்று தெளிவாக ஒரு நூலை எழுதுங்கள் என்றால் அதையும் செய்வதில்லை. கேட்டால் எங்கள் ஹிந்து மதத்தில் எத்தனையோ பிரிவுகள், சிந்தனைகள் என்பார்கள். வெட்டிப்பேச்சு மாய்மாலத்தைத் தவிர ஆய்வு மனப்பான்மையோ, அறிவு நேர்மையோ இல்லாமல் தமிழ்நாட்டில் ஆரிய மாயை வேலை பார்க்கிறார்கள்.

**சனாதனம் என்றால் இந்து மதமா?**

இங்கேதான் பெரிய பிரச்சினை. காசி வித்தியாசாலை நூல் தெளிவாக சனாதன மதம், ஆரிய மதம், ஹிந்து மதம் எல்லாம் ஒன்றுதான் என்று கூறுகிறது. அதாவது பார்ப்பனர்களின் மதம். இங்கே பிரச்சினை என்னவென்றால், இந்தியா முழுவதும் கும்பிடப்படும் சாமிகள் எல்லாவற்றிலும் பார்ப்பனர்கள் அவர்கள் லேபிளை ஒட்டி விட்டார்கள். எல்லா தரிசனங்களும் இந்து என்கிறார்கள். உதாரணங்களைப் பார்ப்போம்.

தமிழ் சைவ சித்தாந்தம் ஒரு தனித்துவமான தரிசனம். இதைப் பயின்ற சான்றோர்கள் வேத அதாவது வைதீக மரபை ஏற்பதில்லை. சோமசுந்தர பாரதியார் அவர் திருமணத்தில் பார்ப்பன புரோகிதர்களையோ, சடங்குகளையோ அனுமதிக்கவில்லை. தமிழ் சைவ தரிசனத்தில் நால்வர்ண கோட்பாட்டை குறித்த விளக்கங்களோ, விதிகளோ இல்லை. அதனால் வடலூர் இராமலிங்க சுவாமிகள் (வள்ளலார்) சமரச சன்மார்க்கம் என்ற தரிசனத்தையும், அருட்பா என்ற பாடல் தொகுப்பையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வழங்கினார்.

ஆனால், இப்போது இவையெல்லாமே இந்து மதம் என்கிறார்கள். தமிழ்நாடு ஆளுநர் ரவி, சனாதனத்தை எதிர்த்த வள்ளலாரே சனாதனத்தின் உச்சம் என்று கூச்சமில்லாமல் பொய் பேசுகிறார். சத்தியவேல் முருகனார் போன்ற சைவப் பெரியோர்கள் தமிழ் சைவம், இந்து மதம் அல்ல என்று கூறினாலும் அதை ஏற்றுக்கொள்வதில்லை.

இந்தியாவில் உள்ள எத்தனையோ தரிசனங்கள், வழிபாட்டு முறைகள், தெய்வங்கள் ஆரியர்களின் வேதகால மூலங்களுக்குத் தொடர்பில்லாதவை. ஆனால், அனைத்தையும் தங்கள் செல்வாக்குக்குள் அடக்க விரும்பும் பார்ப்பனர்கள் எல்லாவற்றிலும் தங்கள் சனாதன லேபிளை ஒட்டி, எல்லாம் இந்து மதம் என்று சாதிக்கிறார்கள்.

**சனாதனம் என்பது மூடப் பழக்கங்களா?**

பார்ப்பனரானாலும் வைணவர்களிடையே சாதி வேற்றுமை பார்ப்பதை கடுமையாக எதிர்த்தார் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ராமானுஜர். பார்ப்பனரல்லாதவரானாலும் தன் குருவாக நினைத்த திருக்கச்சி நம்பிகளை அவர் மனைவி அவமரியாதை செய்ததால், மனைவியைப் பிரிந்தார். அவருடன் முரண்பட்ட பார்ப்பனர்கள்தான் சனாதனிகள். ராமானுஜர் மாற்றத்தை, சமத்துவத்தை சிந்தித்தார்.

விதவை மறுமணத்தை ஏற்க மறுத்தவர்களை சனாதனிகள் என்று அழைத்தார்கள். குழந்தை திருமணத்தை தடை செய்வதை எதிர்த்தவர்கள், தேவதாசிகள் தடை சட்டத்தை எதிர்த்தவர்கள், ஆலய நுழைவை எதிர்த்தவர்கள் எல்லோரையும் சனாதனிகள் என்று அழைத்தார்கள்.

எனவே சனாதனம் என்பது மாற்றத்தை மறுக்கும் பிற்போக்கு கொள்கைகள், வர்ணாதர்மம் என்றே பொருள்படும்.

**பாரதம் என்ற வார்த்தையின் மூலாதாரம் என்ன?**

இந்தியிலும், வேறு பல மொழிகளிலும் பாரத் என்றுதான் ஏற்கனவே குறிப்பிட்டு வருகிறார்கள். ஆங்கிலத்தில்தான் இந்தியா என்ற சொல் பாவனையில் உள்ளது. அதேபோல தமிழிலும், வேறு சில மொழிகளிலும் இந்தியா என்பது சாதாரணமாக பாவிக்கப்பட்டு வருகின்றது. இப்போது பிரச்சினையே ஆங்கிலத்திலும் இந்தியாவை தவிர்த்து பாரத் என்று கூற வேண்டுமா என்பதுதான்.

இந்தியாவிற்குள் நிலத்தில் பயணம் செய்து வந்தவர்கள் அனைவரும் இமய மலைத்தொடரில் இருந்த கைபர், போலன் கணவாய் வழியாகத்தான் வந்தார்கள். அவ்விதம் வந்தவர்கள் முதலில் எதிர்கொண்டது சிந்து நதி தீரம். சிந்து என்பதை கிரேக்கர்கள் இன்டஸ்




(Indos) என்று அழைத்தார்கள். உதாரணமாக கி.மு. நான்காம் நூற்றாண்டில் கிரேக்க வலாற்றாசிரியர் மெகஸ்தனிஸ் (Megasthenes), இண்டிகா (Indica) என்ற நூலை எழுதினார். இதைத் தொடர்ந்த திரிபுதான் இந்தியா. கொலம்பஸ் அமெரிக்காவுக்கு அருகிலுள்ள தீவுகளை அடைந்தபோது, அதனை இந்தியா என்று நினைத்ததால் இன்றளவும் அது வெஸ்ட் இண்டீஸ் (West Indies), மேற்கு இந்தியா என்று அழைக்கப்படுகிறது. கிரிக்கெட் இரசிகர்களுக்குத் தெரியும்.

பாரசீகர்களும், அரேபியர்களும் சிந்து என்பதை ஹிந்த் என்று எழுதினார்கள். அதனால் அந்த நதியை ஒட்டிய பகுதியை ஹிந்துஸ்தான் என்றார்கள். எனவே இந்துஸ்தான் என்ற பெயரும் சிந்து நதியை ஒட்டியதுதான். ஆனால் இதே பெயரில் ஹிந்து மதம், ஹிந்தி மொழி என்றெல்லாமும் பெயரிட்டுவிட்டதால் ஹிந்துஸ்தானம் என்பதைவிட இந்தியா என்ற பெயர் சற்றே பொதுத்தன்மையுடன் உள்ளதாலோ என்னவோ இந்தியா என்ற பெயரே ஆங்கிலத்தில் நிலைத்துவிட்டது.

இப்போது பாரதீய ஜனதா கட்சி நமக்கு நாமே வைத்துக்கொண்ட பெயர் பாரதம் என்கிறது. பார்ப்பனர்கள் சொல்லும் மந்திரங்களில் “ஜம்புத்வீபே, பரத கண்டே” என்று சொல்லுவதாகத் தெரிகிறது. தமிழ்த்தாய் வாழ்த்திலும் “சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்” என்று வருகிறது. இதெல்லாம் கண்டம் என்ற நிலப்பரப்பை சுட்டுகின்றன. தேசம் என்பதையல்ல. பின்னால் இருபதாம் நூற்றாண்டில் பாரதியார் தமிழில் பாரத தேசம் என்பதை பிரபலப்படுத்தினார். வங்காளத்திலும், இந்தியிலும் “பாரத் மாதா” என்ற வழக்கு நிலைப்பட்டது.

இதெல்லாம் சரிதான். இந்தியா சிந்து நதியிலிருந்து வந்தது. பாரதம் எதிலிருந்து வந்தது என்று கேட்டால்தான் ஆரியம் பல்லிளிக்கிறது. ஜட பரதன் என்ற முனிவர் என்கிறது. பரதன் என்ற மன்னன் என்கிறது. இவர்களுக்கெல்லாம் எந்த சரித்திர ஆதாரமும் இல்லை. எல்லாம் புராணக் கற்பனையில் உருவானவை.

மகாபாரதம் என்று ஒரு இதிகாசத்திற்கு பெயர் இருக்கிறது. இதற்கு ஏன் பாரதம் என்று பெயர் என்றால் அதிலும் திட்டவட்டமாக ஒரு தெளிவில்லை. குரு வம்சத்தின் முக்கியமான மன்னன், முதல் மன்னன் பரதன் என்றெல்லாம் கூறுகிறார்கள்.

இந்தியாவில் ஆரியர்களுக்கு முன்பே பல்வேறு பண்பாடுகள் நிலவின என்பதில் ஆய்வாளர்கள் யாருக்கும் எந்த ஐயமும் கிடையாது. ஆரிய பண்பாடு மட்டுமே இந்தியாவின் முக்கிய பண்பாடு என்று யாரும் வாதிட முடியாது. திராவிட பண்பாடும் சரி, பல்வேறு பூர்வகுடிகளின் பண்பாட்டு மூலகங்களும் சரி புறக்கணிக்கத்தக்கவை அல்ல. இந்த பண்பாடுகள் பலவும் ஆரியர்களுடன் முரண் உறவைக் கொண்டவை.

இந்த நிலையில் அனைவரும் ஏற்றுக்கொண்ட புவியியல் அடிப்படை கொண்ட இந்தியா என்ற பெயரே ஆங்கிலத்தில் புழங்குவதுதானே சரியாக இருக்கும்? இந்தியில் ஏற்கனவே பாரத் என்ற பெயரைத்தான் ரூபாய் நோட்டிலும், பாஸ்போர்ட்டிலும் பயன்படுத்துகிறார்கள். ஆங்கிலத்தில் இந்தியா. இதை இப்போது மாற்றுவது நாட்டை ஆரியமயமாக்கத்தானே? என்று மடியும் இந்த ஆரிய மாயை?

**7ம் பக்கத்தொடர்ச்சி...**


கியூபாவில் தவறான தகவல்களைப் பரப்புவதில் அமெரிக்காவின் சீ.ஐ.ஏ. அமைப்புக்கு ஒரு வரலாறு இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளும் ‘கார்டியன்’ பத்திரிகை, 1960 களில் ‘ரேடியோ சுவான்’ (Radio Swan) மூலம் சீ.ஐ.ஏ. நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு மக்கள் மத்தியில் அபகீர்த்தி ஏற்படுத்துவதற்கும், 1961 இல் தோல்வியடைந்த பன்றிக்குடா ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் (Bay of Pigs invasion) போது தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் அமெரிக்கா நிதியுதவி அளித்தது என்றும், 2021 இல் கியூபாவில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதற்கும் அமெரிக்கா நிதியுதவி அளித்தது என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

இன்றும் கூட அமெரிக்கா கியூபாவில் இருந்துகொண்டு தவறான தகவல்களைப் பரப்பி வரும் பிரபலமான ‘ரேடியோ வை ரெலிவிசன் மார்ட்டி’ (Radio Y Television Marti) என்ற ஸ்பானிய மொழி நிறுவனத்துக்கு அமெரிக்கா நிதியுதவி அளித்து வருகிறது.

சீ.ஐ.ஏவின் முகவர்ஃபுல்ரன் மேலும் குறிப்பிடுகையில், கியூபா போன்ற வெளிநாடுகளில் நாடுகளில் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கும் தனது யுத்ததந்திரத்துக்கு ஏற்ப அமெரிக்கா செயல்பட்டு வருகிறது எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஃபுல்ரன் சீ.ஐ.ஏவின் உளவு நடவடிக்கைகளுக்காக கியூபத் தலைநகர் ஹவானாவில் உள்ள சுவிற்சிலாந்து தூதரகத்தில் இயங்கி வந்த அமெரிக்க இராஜாங்க திணைக்கள அலுவலகம் ஒன்றிலும் பணியாற்றி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எவர் ஒருவரையும் விட்டுவிடாமல்...



**புதுடெல்லியில் செப்டம்பர் 9–10 திகதிகளில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டில் பிரேசில் ஜனாதிபதி லூலா டா சில்வா (Lula da Silva) ஆற்றிய உரை:**

**நா**ன் உலகை ஒரு பெரிய குடும்பத்துடன் ஒப்பிடுகிறேன். அதன் உறுப்பினர்கள் இடையே நிலவும் நல்லிணக்கத்தைப் பொறுத்தே அதன் நல்வாழ்வு அமையும். நாம் ஒருவருக்கு ஒருவர் நல்ல சகோதர சகோதரிகளாக செயல்படுகிறோமா என என்னை நானே கேட்டுக்கொள்கிறேன்.
துரதிருஷ்டவசமாக ‘இல்லை’ என்பதே பதிலாக தெரிகிறது. நாம் வெவ்வேறு மொழிகளில் பேசினாலும் ஒருவரை ஒருவர் முழுமையாக புரிந்து கொள்கிறோம். வெவ்வேறு ஆளுமைகள் நமக்குள் இருந்தாலும் பொது நலன் சார்ந்து செயலாற்ற முடிகிறது. உதாரணத்திற்கு இந்த ஜி20 உச்சிமாநாட்டை எடுத்துக்கொள்ளலாம்.

**38 மடங்காக அதிகரித்த இடைவெளி**

எவ்வளவு முயன்றாலும் நம்மிடையே வேறுபாடுகள் மேலோங்கியுள்ளன. சமத்துவமின்மை என்பது நம்மிடையே பேதங்களை அதிகரித்து வருகிறது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பணக்காரர்களின் வருமானம் ஏழைகளின் வருமானத்தை விட 18 மடங்கு அதிகமாக இருந்தது. ஆனால், நான்காவது தொழிற்புரட்சிக் காலத்தின் மத்தியில் இன்று அந்த இடைவெளி 38 மடங்காக பெருகி நிற்கின்றது. 10 சதவீதமாக உள்ள செல்வந்தர்கள் புவியின் 76 சதவிகித செல்வாதாரங்களை கையகப்படுத்தியுள்ளனர். 50 சதவீதமாக உள்ள ஏழைகளிடம் வெறும் 2 சதவீதம் வளங்களே மிஞ்சி நிற்கின்றன.

**இன்னும் 300 ஆண்டுகள்**

2030ஆம் ஆண்டுவாக்கில் 8.4 கோடி குழந்தைகள் பள்ளிக்குச் சென்று கல்வி கற்க இயலாத நிலையில் இருப்பார்கள் என ஐநாவின் தரவுகள் கூறுகின்றன. சட்டம் பரிந்துரைக்கும் பாலின சமத்துவத்தை அடைய இன்னும் 300 ஆண்டுகள் தேவைப்படும். உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் கணிப்பின்படி 70 கோடி மக்கள் பசி, பட்டினியின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். இதனை நாம் அனுதிக்கவே முடியாது. ஆனாலும் இயல்பான ஒன்றாக சாதாரணமாக கடந்து போகிறோம். மிகவும் பாதிப்புகளை சுமப்பவர்களுக்கு எவ்வித பலனும் சென்று சேர்வதில்லை. பெண்கள், இனச்சிறுபான்மையினர், தற்பாலின ஆர்வலர்கள் (லெஸ்பியன், தன்பாலின ஈர்ப்பு ஆண், பெண், இருபாலின ஈர்ப்புடைய ஆண், பெண், திருநர், திருநம்பி, பால் புதுமையினர் - LGBTQIA+) ஆகியோருக்கு எதிரான பாகுபாடுகளைக் களைவதில் சந்தை மிகவும் அலட்சியமாக உள்ளது. சமத்துவமின்மை என்பது இயற்கையால் வடிவமைக்கப்பட்டதல்ல. மாறாக சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்டது. அதை எதிர்த்துப் போராட ஒவ்வொரு நாளும் உறுதியேற்க வேண்டும்.

**பசியில்லாத பிரேசில்**

வறுமை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மையை குறைக்கும் நோக்கத்தில் தொடர்ச்சியான நடவடிக்கை கள் எடுத்து வருகிறோம். கடந்த வாரம் எங்கள் பிரேசிலில் ‘பசியில்லாத பிரேசில்’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். எல்லோருக்கும் தரமான அடிப்படை சேவைகளை உறுதிசெய்வது என்பதுதான் அனை வருக்கும் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்திட உதவும். இனவெறி மற்றும் பாலின வெறிகளை நம் சமூக, நிறுவன நடைமுறைகளிலிருந்து ஒழித்துக் கட்டுவதன் மூலமே நல்ல நோக்கபூர்வமான பொதுக் கொள்கைகளை வடிவமைத்திட முடியும்.

**சமவேலைக்கு சம ஊதியம்**

பிரேசிலில் ஒரே வேலையைச் செய்யும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே ஊதியம் வழங்குவதை கட்டாயமாக்கினோம். இது சர்வதேச தொழிலாளர் அமைப்பின் விதிமுறையாகும். உலகின் 20 பெரிய பொருளாதார நாடுகளின் தலைவர்கள் என்ற அடிப்படையில் நமது குடிமக்களைப் பராமரிக்கும் திறனை வலுப்படுத்துவதும் நம் கடமையாகும். தேசிய அளவில் வரவு செலவு திட்டங்களை வகுக்கும்போது ஏழைகளையும் அவர்தம் தேவைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். பணக் காரர்கள் தங்கள் வருமானம், லாபம், சொத்துக்களுக்கு விகிதாச்சாரத்தின் அடிப்படையில் வரிசெலுத்திட வேண்டும். தங்களின் கடனைப் பெருக்குவதைக்காட்டிலும் வளர்ச்சி மற்றும் சேவையை வழங்குவதில் சர்வதேச நிதி நிறுவனங்கள் கவனம் செலுத்திட வேண்டும்.
நாடுகளுக்கிடையே ஏற்றத்தாழ்வை குறைத்திடும் வகையில் புதிய கண்டுபிடிப்பு தொழில்நுட்பங்கள் பகிரப்படவேண்டும்.

**நான்கு மடங்கான வேறுபாடு**

சமத்துவமின்மை நம் நாடுகளுக்கு உள்ளேயும், நாடுகளுக்கிடையேயும் வளர்ந்துவரும் கொடுமையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கும் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குமிடையில் பணக்கார மற்றும் ஏழை நாடுகளுக்கிடையிலான வேறுபாடு நான்கு மடங்காக அதிகரித்துள்ளது.

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

பிற்போக்கு ஐ.தே.கவை தேர்தலில் தோற்கடித்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது.

இந்த நிகழ்வு வெறுமனே ஒரு பண்டாரநாயக்கவின் வெற்றி மட்டுமல்ல. நாட்டு மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய உணர்வின் பிரதிபலிப்பாகும். மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்த பண்டாரநாயக்க அரசாங்கம், பல ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை விரைந்து எடுத்தது. அதன்படி –

அந்நியருக்குச் சொந்தமாயிருந்த – குறிப்பாக பிரித்தானியருக்கு – சொந்தமாக இருந்த சகல நிறுவனங்களும் நாட்டுடமை ஆக்கப்பட்டன.

கட்டுநாயக்காவிலும் திரிகோணமலையிலும் இருந்த பிரித்தானிய படைத்தளங்கள் அகற்றப்பட்டன.

பிரித்தானியருக்குச் சாதகமாக இருந்த இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை கூட்டுச்சேராக் கொள்கையாக மாற்றி அமைக்கப்பட்டது.

பல தொழிலாளர் நல, மக்கள் நலக் கொள்கைகள் சட்டமாக்கப்பட்டன.

பண்டாரநாயக்கவின் இந்த ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகள் காரணமாக பிற்போக்கு சக்திகள் அவரை 1957 இல் படுகொலை செய்தன. ஆனால் அவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அவரது மனைவி சிறீமாவோ பண்டாரநாயக்க, தனது கணவரின் ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளை இடதுசாரிகளின் ஆதரவுடன் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார். அவரது காலத்தில்தான் –

பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன.

பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டன.

போக்குவரத்துச் சேவை தேசியமயமாக்கப்பட்டது.

காணி உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இப்படியாக பண்டாரநாயக்காக்களின் அரசாங்கங்கங்கள் இடதுசாரி கட்சிகளின் ஆதரவுடன் முன்னெடுத்த நடவடிக்கைகள் காரணமாகவே நாட்டில் தேசிய பொருளாதாரம், தேசிய கலாச்சாரம் என்பன கட்டியெழுப்பப்பட்டன. அதன் காரணமாக வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டதுடன், பொருளாதார சுபீட்சமும் கணிசமான அளவு அதிகரித்தது. தென்னாசியப் பிராந்தியத்திலும், சர்வதேச அரங்கிலும் இலங்கையின் மதிப்பும் அதிகரித்தது.

1970 களில் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் இடதுசாரிக் கட்சிகளையும் உள்ளடக்கிய மக்கள் அரசாங்கம் இருந்த காலத்தில் சர்வதேச ரீதியாக பெரும் பொருளாதார நெருக்கடி உருவாகியிருந்த போதிலும், இலங்கையை மக்கள் அரசாங்கம் வெளிநாடுகளுக்கு ஈடு வைக்கவோ அல்லது பெரும் கடனாளியாக்கவோ முற்படவில்லை. பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இலங்கையின் இறைமையைப் பேணுவதற்கும், சுயாதார பொளுளாதாரக் கட்டமைப்பை நிலைநிறுத்துவதற்கும் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது.

இருந்தும் மக்களுக்கு தற்காலிகமாக ஏற்பட்ட பொருளாதாரத் துன்பங்களைக் காரணம் காட்டி ரணில் விக்கிரமசிங்கவின் தாய் மாமனாரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. 1977 பொதுத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்தைத் தோற்கடித்தது. அந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் அரசாங்கம் ஆட்சியை விட்டுப் போகும்போது திறைசேரியில் 650 கோடி ரூபாவை அந்நியச் செலாவணிக் கையிருப்பாக வைத்துவிட்டே சென்றது.

ஆனால் 1977 இல் ஆட்சிக்கு வந்து 17 ஆண்டுகள் ஆட்சியதிகாரத்தில் இருந்த ஜே.ஆர். அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தையே தலைகீழாகப் புரட்டிப் போட்டது. பண்டாரநாயக்காக்களின் அரசாங்கங்கள் தேசியமயமாக்கிய பெரும்பாலான நிறுவனங்களை ஜே.ஆரின் அரசு திரும்பவும் தனியார் துறையினரிடமே கையளித்தது, நாட்டின் வளங்களை அந்நியர்கள் கொள்ளையடிப்பதற்கு கதவுகளை அகலத் திறந்து விட்டது, வகை தொகையில்லாமல் அந்நிய நாடுகளிடம் கடன் வாங்கி நாட்டைப் பெரும் கடனாளியாக்கியது, இப்படியாக பல மக்கள் விரோத, தேச விரோத நடவடிக்கைகளை அந்த அரசு மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாகவே பிற்காலத்தில் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது என்பதை பெரும் பொருளாதார விற்பன்னர்களே பார்க்கத் தவறி விடுகிறார்கள்.

ஐ.தே.க. அரசு 17 வருடங்களாக மேற்கொண்ட மக்கள் விரோத நடவடிக்கைகள் காரணமாகவே அந்த அரசு 1994 இல் வீழ்த்தப்பட்டது. இருந்தும் அதன் பிறகு சந்திரிக குமாரதுங்க இரண்டு தடவைகளும், மகிந்த ராஜபக்ச இரண்டு தடவைகளும், மைத்திரிபால சிறிசேன ஒரு தடவையும் ஜனாதிபதிகளாகப் பதவி வகித்துள்ளனர். இவர்கள் அனைவரும் ஐ.தே.க. எதிர்ப்பு அரசியல் பாசறையில் வளர்ந்தவர்கள். இருந்த போதிலும், இவர்கள் எவராவது ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க. அரசு “திறந்த பொருளாதாரம்” என்ற பெயரில் ஆரம்பித்து வைத்து நாட்டை நாசமாக்கிய பொருளதாரக் கொள்கையை மாற்றியமைக்க ஒரு துரும்பளவு முயற்சியைக் கூட மேற்கொள்ளவோ, பண்டாரநாயக்காக்களது தேசிய சார்பு பொருளாதாரக் கொள்கைகளை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரவோ முயற்சிக்கவில்லை. ஜே.ஆரின் நாசகார பொருளாதாரக் கொள்கைகளையே தொடர்ந்தனர். இதன் காரணமாகவே இலங்கையின் கொருளாதார நிலைமை நெருக்கடிக்குள்ளாகி வருடங்களாக மோசமடையத் தொடங்கியது.

இந்த நிலைமையில்தான் கடந்த ஜனாதிபதி தேர்தலில் சுமார் 69 இலட்சம் வாக்குகள் பெற்று வெற்றியீட்டிய கோத்தபாய ராஜபக்ச நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் சுயசார்பில் நிலைநிறுத்தி, தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் இறங்கினார். ஆனால் அவரது கெட்ட காலம், சர்வதேச ரீதியில் எழுந்த பொருளாதார நெருக்கடிகளும், ஜே.ஆரின் பொருளாதாரக் கோட்பாட்டில் ஊறிய ஊழல்கார அதிகார வர்க்கமும் அவரது முயற்சிகளுக்கு ஒத்துழைக்க மறுத்தும் அவரது முயற்சிகளுக்கு அணைபோட்டு விட்டன. அதன் காரணமாக நாட்டில் விலைவாசி உயர்வும் பொருட்கள் தட்டுப்பாடும் ஏற்பட வழிவகுத்து விட்டது. அதைப் பயன்படுத்திய ஏகாதிபத்திய சக்திகள் “அரகலய” என்ற பெயரில் ஒரு அராஜக நாடகத்தை கோத்தபாய அரசுக்கு எதிராக அரங்கேற்றி அவரைப் பதவியில் இருந்து அகற்றி விட்டன.

இந்த இடத்தில் ஒன்றை நினைவுகூர வேண்டும். இந்த “அரகலய” என்ற போராட்டத்தில் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைத்து ராஜபக்ச எதிர்ப்புச் சக்திகளும் ஒன்றிணைந்து நின்றன. அது மட்டுமின்றி, இன்று ராஜபக்சாக்களது பொதுஜன பெரமுன கட்சியின் தயவில் ஜனாதிபதி ஆகி இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவும் கூட இந்த அரகலய போராட்டத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் தனது ஆதரவை வழங்கியவர்தான்.
ஏகாதிபத்திய சக்திகளின் திட்டப்படி ராஜபக்சாக்கள் அகற்றப்பட்டு, ரணில் ஜனாதிபதியாகி விட்டார். என்றாலும், ராஜபக்சாக்களுக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு அப்படியே இருப்பதால், அச்சமடைந்துள்ள ஏகாதிபத்திய சக்திகள் ராஜபக்சாக்களின் செல்வாக்கை முற்றிலும் அகற்றும் பகீரதப் பிரயத்தனங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

ரணில் ஜனாதிபதியானதும் ஏகாதிபத்திய வட்டிக்கடைக்காரர்களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற தனது எஜமான நிறுவனங்களிடம் நிபந்தனைகளும் அதிக வட்டியும் கூடிய கடன்களைப் பெற்று, புண்ணுக்கு பவுடர் பூசுவது போல சில தற்காலிக நிவாரணங்களை மக்களுக்கு வழங்கி ஒரு சிறு அமைதிப்படுத்தலை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் இது நீண்ட நாட்கள் நீடிக்காது. மக்கள் விரைவில் ரணில் அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுவர் என்பது திண்ணம்.

இலங்கையில் தமது நிலையை வலுப்படுத்துவதானால், தமது சர்வதேச நிறுவனங்கள் மூலம் நிதியுதவி வழங்கினால் மட்டும் போதாது. வெளிநாட்டு முதலீடுகளையும், உள்நாட்டு பெரு முதலாளிகளின் முதலீடுகளையும் ஊக்குவிக்க வேண்டும். அதன் மூலம் இலங்கையின் பொதுத்துறைப் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதே ஏகாதிபத்திய சக்திகள் தற்பொழுது போட்டுள்ள திட்டம்.

அதையே ரணிலின் சமீபத்திய தனியார் துறை மூலம் பொருளதாரத்தை வளர்க்க வேண்டும் என்ற பேச்சு பிரதிபலித்து நிற்கிறது. அதன் அர்த்தம் என்னவென்றால் மிகுதியாக இருக்கிற அரச துறைகளான வங்கிகள், போக்குவரத்து, துறைமுகங்கள், மின்சாரசபை, வைத்தியசாலைகள், பாடசாலைகள், வங்கிகள், காப்புறுதித்துறை, தபால்~தந்தி துறை போன்றவற்றையும் தனியார்மயப்படுத்துவது என்பதுதான்.

அந்த நிலை வர நாட்டு மக்கள் இடமளிக்கக்கூடாது. மக்களுக்கு நன்மை பயப்பதற்காக கடந்த காலங்களில் மக்கள் சார்பு அரசாங்கங்களால் நாட்டுடமையாக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் பாதுகாப்பதற்காக மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட வேண்டும்.

ரணிலோ அல்லது வேறு எந்தச் சக்திகளுமோ நாட்டை பின்னோக்கி இழுத்துச் செல்வதை அனுமதிக்கக்கூடாது.

# சிரியாவின் எண்ணெயைத் திருடும் அமெரிக்கா மீது நடவடிக்கை எடுக்க ஐ.நா.விடம் வலியுறுத்தல்

**அ**மெரிக்கா தனது இராணுவம் மூலம் பல ஆண்டுகளாக சிரியாவின் எரிவாயு மற்றும் பல இலட்சம் பரல் எண்ணெய் வளத்தை கொள்ளை அடித்துள்ளது எனவும், தற்போது அதற்கான இழப்பீடை அமெரிக்கா வழங்க வேண்டும் என்றும் சிரியா வெளியுறவு அமைச்சகம் ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் மற்றும் பாதுகாப்பு கவுன்சில் தலைவரான அல்பேனிய அரசு ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளது. சர்வதேச சட்டங்கள் மற்றும் ஐ.நா. சாசனத்தை மீறி தங்கள் நாட்டின் வட கிழக்கு மற்றும் தென்கிழக்கில் சட்ட விரோதமாக இராணுவத் துருப்புக்களை நிலைநிறுத்தியுள்ள அமெரிக்காவின் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க சர்வதேச அமைப்பிற்கு இக்கடிதம் மூலம் சிரியா தூதர்கள் வலியுறுத்தி உள்ளனர். மேலும் தங்கள் நாட்டின் வளங்களை சூறையாடிய அமெரிக்காவை குற்றவாளி என சிரியா குறிப்பிட்டுள்ளது.

2011 முதல் 2023 வரை அமெரிக்கா தனது இராணுவம் மூலம் சிரியாவில் இருந்து 11,520 கோடி டொலர்கள் அளவிற்கு எண்ணெய் வளங்களைத் திருடி உள்ளது என்றும், இந்தத் திருட்டுக்கு அமெரிக்க அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்றும், அமெரிக்கா அதற்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்றும், சிரியாவிலிருந்து அனைத்து அமெரிக்க இராணுவ வீரர்களையும் அமெரிக்கா திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும், அனைத்து எண்ணெய் மற்றும் எரிவாயு வயல்கள் சிரிய அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் அக்கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளது. கடந்த மாத இறுதியில், அமெரிக்க இராணுவ கூட்டுப்படைத் தலைவர் ஜெனரல் மார்க் மில்லி, சிரியாவில் இருந்து மட்டும் அல்ல, மத்திய கிழக்கு நாடுகளின் இருந்தும் தங்களது இராணுவம் வெளியேறாது எனக் கூறியுள்ளார். ஐ.எஸ் பயங்கரவாதிகளிடம் இருந்து பாதுகாக்கிறோம் என காரணம் கூறிக்கொண்டு சிரியா முழுவதும் எண்ணெய் வளங்களை சுரண்டி வருகிறது அமெரிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

14ம் பக்கத்தொடர்ச்சி...

பொருளாதார மற்றும் நிதி சார்புகளின் புதிய வடிவங்கள், நியாயமற்ற விதிகள் மற்றும் உலக நிறுவனங்களின் நிறைவேற்றப்படாத உறுதி மொழிகளால் சமச்சீரற்ற தன்மை நீடித்தது.

2030 நிகழ்ச்சி நிரல் இந்த உறவுகளை மறுவரையறை செய்திடும் என நம்புகிறேன். நிலையான வளர்ச்சியின் இலக்குகளுக்கு உயிர்கொடுக்கும் ஒற்றுமை உணர்வை நாம் அவசரமாக மீட்டெடுக்க வேண்டும். இதன் மூலம் நம்முடைய சமகாலத்திய பொருளாதார சவால்களுக்கு கூட்டுணர்வின் அடிப்படையில் பதில் அளித்திட முடியும்.

ஜி20 நாடுகளுக்கு நாங்கள் தலைமைப் பொறுப்பு ஏற்கையில் பசி, பட்டினிக்கு எதிராக உலகளாவிய கூட்டணியை தொடங்குவோம். அதற்காக உங்களின் ஆதரவையும், ஈடுபாட்டையும் பெரிதளவு எதிர்பார்க்கிறோம்.
சமத்துவமின்மை குறைய வேண்டும். சகோதரத்துவம் பெருகவேண்டும். அத்தகைய உலகை உருவாக்குவோம். எவர் ஒருவரையும் விட்டுவிடாமல் எல்லோரையும் ஒன்றிணைத்து ஒருவரை ஒருவர் உண்மையாக அங்கீகரிக்கும் வகையில் அதை நிர்மாணிப்போம்.

**தமிழில் : கடலூர் சுகுமாரன்**

# சீனாவின் பொருளாதார வளர்ச்சி, உலக வளர்ச்சிக்கு இன்றியமையாதது

சீனாவில் சிறு பொருளாதார மந்தநிலை ஏற்பட்டால் கூட, அதன் காரணமாக உலகப் பொருளாதாரம் ஆபத்தில் செல்வதாக மேற்கத்திய ஊடகங்கள் பிரச்சாரம் செய்யத் துவங்கி விடுகின்றன. சீனாவின் நிலையான பொருளாதார வளர்ச்சி இன்றும் உலகளாவிய பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகிறது. இதே வேளையில் சீனா எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க தீவிர நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என சீன வெளியுறவு துறை அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் (Wang Wenbin) தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 5.5 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் இருந்த 3 சதவிகித வளர்ச்சியை விட வேகமாக இருப்பதோடு, கொரோனா தொற்று காலத்தையும் சேர்த்து கணக்கிட்டால் (2020–2022) பொருளாதார வளர்ச்சி சராசரியாக 4.5 சதவிகிதமாக உள்ளது. அத்தோடு இந்த ஆண்டின் 5.5 சதவிகித வளர்ச்சி என்பது அமெரிக்காவின் வளர்ச்சியை விட மூன்று சதவீத புள்ளிகள் அதிகம்.

ஜூலை மாதம், சீனாவின் பொருளாதாரம் 2023 இல் 5.2 சதவிகிதம் வளர்ச்சியடைந்து, உலக பொருளாதார வளர்ச்சியில் மூன்றில் ஒரு பங்கிற்கு பங்கு வகிக்கும் என்று சர்வதேச நிதியம் கணித்தது குறிப்பிடத்தக்கது. சீனாவின் நுகர்வு மற்றும் தொழில்துறை மேம்பாடு ஆகியவை பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதில் முக்கியபங்கு வகிக்கின்றன. உதாரணமாக, இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் சீனாவின் உள்நாட்டுத் தேவை அதன் பொருளாதார வளர்ச்சிக்கு 110.8 சதவிகிதம் பங்களிப்புச் செய்துள்ளது. ஒவ்வொரு வருடமும் 59.4 சதவிகித புள்ளிகள் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதில் நுகர்வு 46.4 சதவீத புள்ளிகள் அதிகரித்து, 77.2 சதவீத பங்களிப்பை தருகின்றது.



Wang Wenbin

தொழில்துறை வளர்ச்சிக்கு அடிப்படையாக, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் உயர் தொழில்நுட்ப தொழில்துறையில் ஆண்டுக் 11.5 சதவீதம் முதலீடுகளை அரசு அதிகரித்துள்ளது என்றும், முதல் ஏழு மாதங்களில் தொழில்நுட்ப சேவைகளுக்காக செய்யப்பட்ட முதலீடு 23.1 சதவீதம் அதிகரித்துள்ளது எனவும் அமைச்சின் பேச்சாளர் வாங் குறிப்பிட்டுள்ளார். சீனா உள்நாட்டில் உற்பத்தி செய்யும் மாற்று எரிசக்திகளான மின்சார வாகனங்கள், லித்தியம் பற்றரிகள் மற்றும் சோலார் பனல்கள் ஏற்றுமதி ஆண்டின் முதல் பாதியில் 61.6 சதவீதம் அதிகரித்துள்ளது, மேலும் சர்வதேசச் சந்தையில் சீனாவின் ஏற்றுமதியின் பங்கு ஜனவரி முதல் ஜூலை வரை இறக்கம் இன்றி நிலையாக உள்ளது என்றும், அதிக பணவீக்கம், நிலையற்ற நிதிச் சந்தை மற்றும் அதிகரித்து வரும் கடன் அழுத்தம் போன்ற பல சவால்களுக்கு மத்தியில் உலகப் பொருளாதார மீட்சி என்பது மந்தமாக உள்ளது என்றும், பொருளாதார வளர்ச்சிக்கு தற்போது காணப்படும் முடிவுகளுடன் பெருகி வரும் புதிய சவால்களை எதிர்கொள்ள சீனா தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மேற்கத்திய ஊடகங்கள் மற்றும் அரசியல்வாதிகள் சீனா எதிர்கொள்ளும் பிரச்சனைகளை பற்றி மட்டும் விளம்பரப்படுத்துகின்றன. அதே நேரத்தில் தனது பொருளாதார யுக்தி மூலம் சீனா மீண்டு வருவதை அவர்கள் மறைத்து விடுகின்றனர். உலகளவில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், நுகர்வை அதிகரிப்பதற்காகவும், தனியார் பொருளாதாரத்தை ஆதரிப்பதற்காகவும், வணிகச் சூழலை மேம்படுத்துவதற்கும் பல்வேறு அம்சங்கள் உள்ளடங்கிய பரந்த அளவிலான நடவடிக்கைகளை சீன அரசு உருவாக்கியுள்ளது என சீன வெளியுறவு துறை அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் தெரிவித்துள்ளார். இந்த வணிகச் சூழலை மேம்படுத்துவதற்காக சீன ஸ்டேட் கவுன்சில் (State Council of the People's Republic of China) மற்றும் அமைச்சரவை, ஓகஸ்ட் 13 ஞாயிற்றுக்கிழமை பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கு 24 அம்ச வழிகாட்டுதலை வெளியிட்டது. மறுதினம் சீன அதிகாரிகள் சீனாவில் அந்நிய முதலீட்டை அதிகரிப்பதற்கும், பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் வெளிநாட்டு முதலீட்டிற்கான கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கும், முக்கியப் பகுதிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான சந்தை அணுகலை விரிவுபடுத்துவதற்கும் புதிதாக வெளியிடப்பட்ட நடவடிக்கைகளை முழுமையாகச் செயல்படுத்துவதாக உறுதியளித்துள்ளனர்.

சீனாவின் தேசிய வளர்ச்சி மற்றும் சீர்திருத்த ஆணையம் (National Development and Reform Commission - NDRC), சிறந்த பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, உள்நாட்டுச் சந்தையின் தேவையை அதிகப் படுத்துவதையும் உள்நாட்டு செலவினங்களைத் தூண்டுவதற்காக 20 நிர்வாக நடவடிக்கைகளை வெளியிட்டுள்ளது. மேலும் தனியார் முதலீட்டின் வளர்ச்சியைத் தூண்டுவதற்காக வழிமுறைகள் மற்றும் கொள்கைகளை மேம்படுத்த இருப்பதாகவும் கூறியுள்ளது.